தென்றல்

விலை 16 புதிய காசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, பங்குனி 8 (21-3-'59). சனிக்கிழமை | இதழ் 40

மாஸ்கோ சென்ற மாவீரர்களே !

உலகத்தின் பல நாடுகளிலே இருக்கும் கம்யூனிஸ்ட்கள் அனைவரும் ஜனவரித்திங்கள் இறுதிக் கிழமையை தங்களுடைய வாழ்விலோர் திருநாளாக எண்ணி மகிழ்ந்தார்கள். இன்றும் மகிழ்ந்தும், போற்றியும், எழுதி எழுதி மெருகேற்றியும், நமக்கெல்லாம சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் களியாட்டத்திற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் 21-வது மாநாடாகும்! மாஸ்கோவில் ஜனவரி மாதம் 21-ந் தேதியிலிருந்து 27 முடிய நடைபெற்ற மாநாட்டினைப் பற்றி வார்த்தைகளைத் தேடித்தேடி எடுத்து உலகத்துக்கெல்லாம் தெரிவித்தார்கள். வெளிநாடுகளிலேயுள்ள மாஸ்கோவின் ஏஜெண்டுகளுக்கெல்லாம் அழைப்புகள் அனுப்பப்பட்டன. தனித்தனி விமானங்கள் தயாராக வைக்கப்பட்டன. ஜெருசலம் நோக்கிப் புறப்படும் கிருத்துவ மதவாதிகளைப் போலவும், மெக்கா யாத்திரை துவங்கும் நபிநாயகத்தின் அடியார்களைப் போலவும், உலகத்தின் பல பகுதிகளிலேயிருக்கும் மாஸ்கோ பக்தர்களும், குருஷ்சேவின் சீடர்களும், தங்களுடைய அடிமை மனப்பான்மை நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள அந்தந்த நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளிலேயிருக்கும் முக்கியத் தலைவர்கள் ஓரிருவரையும். இவர்களுக்குப் பின்னாலே சேவகம் செய்ய ஒரு குட்டித்தலைவரையும் பொறுக்கியெடுத்துக் கொண்டார்கள்! இந்த முறையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய பிரதிநிதிகளாக சங்கரன் நம்பூதிரிபாத், அஜய்கோஷ், ரஷித் அகமத், எம். ஆர். வெங்கட்டராமன் ஆகிய நால்வரையும் தேர்ந்தெடுத்தது! முதலிருவரும் முன்னணித் தலைவர்கள். இடையிலே இருப்பவர் மத்தியக் காரியாலய காரியதரிசி. கடைசியிலேயிருப்பவர் தமிழ்நாட்டுக்கமிட்டியின் செயலாளர். இவர் மாஸ்கோவில் என்ன செய்தார், என்ன பேசினார் என்பதை எந்தப் பத்திரிகையும் (ஜனசக்தி உள்படத்) தெரிவிக்கவில்லை. இவர் திரும்பி வந்த பிறகு இவரேதான் இப்போது எழுதிக்காட்டத் துவக்கியிருக்கிறார். காரணம் இவர் சேவகம் செய்யவேண்டிய நிலையிலே குழுவிலே இடம்பெற்றவர், மாஸ்கோ மாநாட்டில இந்தியக்குழுவின் தலைவரென்று விளம்பரப்படுத்தப்பட்ட சங்கரன் நம்பூதிரிபாத் பேசவில்லை. அஜய்கோஷ்தான் தங்கள் தந்தையர் நாட்டுத் தலைவர்களுக்குத் தாள்பணிந்த வாழ்த்துக்களையும், தலைவணங்கிய பாராட்டையும் இந்தியக் கம்யூனிஸ்ட்களின் சார்பில் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாஸ்கோ ஏஜண்டுகள் (பிரதிநிதிகள்) வெளிநாட்டுப் பயணச் சலுகை பெறுவதற்கு முன்னால், எல்லோருமே போக வேண்டுமென்று பெட்டி படுக்கைகளைத் தயார் செய்து கொண்டார்கள். கட்சிப் பணத்திலோ அல்லது அவை ரஷ்ய ரூபிளாக்கப்பட்டோ மாஸ்கோ சென்று திரும்புவதை எவர்தான் பெறத் துணியமாட்டார்கள்! இந்திய ஏஜண்டுகளிலேயே, கிரெம்ளின் மாளிகைக்கு மிகவும் நெருங்கிய செல்லப் பிள்ளையான தோழர் பி. டி. ரணதிவேயும் தயாரானார். ஆனால் டில்லி சர்க்கார் அவருக்கு வெளிநாடு - மாஸ்கோ செல்ல அனுமதி தர மறுத்துவிட்டது. டாங்கே எங்கே விசாரணையில்- இந்திய சர்க்கார் டாங்கேயுடன் கலந்து பேசத் தயார். ஆனால் ரணதிவேயுடன் பேசத் தயாராக இல்லை. வெளிநாடு செல்ல அனுமதியும் தருவதில்லை என்று எடுத்துக் காட்டப்பட்ட உண்மைக்கு நல்ல சான்றாக இந்தச் செய்தி அமைந்துவிட்டது! டாங்கே இந்தக் குழுவில் சேர்ந்தால் மீண்டும் ரணதிவேயின் கோபத்திற்கு இரையாக வேண்டும் என்று கருதியே, தான், வெளிநாடு செல்வது மாஸ்கோ மாநாட்டிற்காக அல்ல; அகில உலகத்தொழிற்சங்கக் காங்கிரஸ் பிரதிநிதியாகப் போகிறேன் என்று அனுமதி பெற்றுக் கொண்டார்! இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்களுடைய எதிர்காலத்தின் நம்பிக்கை நட்சத்திரமான நவ கேரளத்தின் நம்பூதிரிபாத் மிஸ்டர் சங்கரனை இந்தியக் குழுவின் தலைவராக்கினார்கள்! எட்டுச் செயலாளர்களும் ஏங்கித் துடித்தார்கள். ஆனால் மாஸ்கோவில் கேரளத்தின் முதன் மந்திரி தலைமையில் சென்றுமுத்திரை வாங்கிக்கொள்வது வருங் காலத்திற்கு ஆதாயம் என்று எண்ணித்தான் சங்கரனை முன்னாலே நிறுத்தினார்கள்! இவருக்கு முன்பே அக்டோபர் புரட்சியின் நாற்பத்தேழாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட கேரளத்தின் குருஷ்சேவ் எம். என். கோவிந்தன் நாயர் கேரளத்தின் சாதனைகளைத் தெரிவித்துவிட்டார். எனவே இரண்டாம் முறையாக முதலமைச்சரும் அவரிடத்திலே கிடைத்துள்ள கேரளத்தின் வீரச் செயல்களை மாஸ்கோ தெய்வங்களுக்குக் காணிக்கையாக்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளத் துடித்ததிலே தவறில்லைதான்! நம்பூதிரியார் தான் முதலமைச்சர் என்ற முகமூடியோடு போகவில்லை. சகோதரப் பிரதிநிதிகளில் ஒருவனாகவே செல்கிறேன் என்று ஒரு தேவையில்லாத அறிக்கை விடுத்தார்! கட்சியின் செயலாளர் அஜய்கோஷ் தலைமையில் புறப்பட வேண்டிய நன்றியறிவிப்புக் குழுவினர் நம்பூதிரியாரை நாடியது ஏன் என்று கம்யூனிஸ்ட்களுக்கே சந்தேகம் தோன்றியதால் திருவனந்தபுரத்துத் தீரன் சங்கரன், சஞ்சலம் போக்கும் வகையில் தன்னை இந்தியப் பிரஜையாக்கினார்!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் புதுடில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்னாலே, ஜனநாயக வழிகளுக்குப் புறம்பாக ஆட்சி நடத்துவதாகவும்- கேரளத்தைப் பல வழிகளில் புறக்கணிப்பதாகவும் வர்ணித்த நேரு மகானிடத்திலே, கொடுத்த அனுமதிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்கள். இருண்டுபோன ஆசியாவின் இருளகற்றும் இனிய ஜோதியென 'இருந்ததையும் இழந்துவிட்டவர்க'ளாலே பாராட்டப்படும் நேருவும் குருஷ்சேவுக்கு 'அன்பு முத்தங்களையும்' - இதர பரிசுகளையும் சங்கரன் தலையிலே ஏற்றி முதலமைச்சரை மூட்டை தூக்கியாக்கினார்! இமயத்தின் சாரலிலேயிருந்து கேரளத்துக் கடலோரம் வரையிலே கம்யூனிஸ்ட்களுக்கு களியாட்டம் தான்! இடையிலே தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் தரையிலே கால் படாமல் தலையாலே நடந்தார்கள்! பிரதமரின் மாளிகைவிட்டு வெளியேறிய முதல்வர் சொன்னார். "மாஸ்கோவில் கேரள சர்க்காருடைய திட்டங்களின் வளர்ச்சிக்கு அதிகமான நிதி உதவிகளைக் கேட்டுப் பெறுவேன். மாற்றுப்பொருட்களாகக் கேரளத்துச் செல்வங்களை மாஸ்கோ விதிகளில் ஏலம் போட்டு ஏற்றுக்கொள்ளவும்செய்வேன்" என்று தெரிவித்தார்! புதுடில்லி 'பாலம்' விமான நிலையத்திலே புறப்பட்ட விமானம் இந்திய எல்லையைத் தாண்டுவதற்கு முன்னாலேயே இந்தியத் தலைநகரிலே எழுப்பப்பட்ட வாழ்த்தொலிகள் மாஸ்கோவில் எதிரொலித்திருக்கக்கூடும்! "நம்பூதிரியார் வெளிநாட்டு வணிக முயற்சியை செய்யமுடியுமா? மத்திய சர்க்காரின் ஆணைக்கு அடங்கி நடக்கும் இவர் இப்படிப் பேசலாமா?" என்று பேட்டிகண்ட நிருபர்களிடத்திலே சிறு சிறு முணகல் சப்தம் கேட்டவுடனே, இந்தக் கேரளத்து லெனின், 'இல்லை யில்லை இந்திய சர்க்காருக்கும சோவியத் யூனியனுக்கும் உறவுகள் மேலும் பலப்பட்டு, கேரளத்துப் பொருள்களை ஏற்றுமதி செய்ய முயற்சி எடுப்பேன்" என்னும் பொருள்படத் தன்னுடைய வார்த்தைகளுக்கு விளக்கம் தந்தார்! குருஷ்சேவும் புல்கானினும் நேருவைத் தங்களுடைய சகோதரர் என்று புகழ்ந்தார்கள். நேருவுக்கும் குருஷ்சேவுக்குமிடையே தூது போகும் தகுதி இந்தப் 'புதிய மைந்துனருக்கு' உண்டா என்று சிலர் எண்ணியிருந்தால் அதிலே குறை காண எவருக்கும் உரிமையில்லை! தன் தரம் தாழ்த்திக்கொள்ளாத முதலமைச்சர் என்றால் நேரு கொடுத்த பரிசுப் பொருள்களை மாஸ்கோத் தூதுவர் மேனனுக்கு அனுப்பி அவர் வாயிலாக குருஷ்சேவிற்கு அளிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று பேசியிருக்க வேண்டும்! நேருவுக்கும் தாங்கள் நல்ல பிள்ளைகள் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகத் தான்— குருஷ்சேவிற்குப் பரிசுகளை தூக்கிச் சென்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் பிரதமரின் எடுபிடியானார்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மாஸ்கோ மண்டலம் நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருந்த நாட்களில் மாஸ்கோ தெய்வங்கள் வரம் கேட்டு வருகின்ற தங்களுடைய பக்தர்களுக்கெல்லாம் சில செய்திகளைத் தெரிவித்தார்கள்! மாநாட்டிற்கு ஆயத்த வேலைகள் செய்வதற்காகக் கூட்டப்பட்ட மாநாட்டில்,

— 10-ம் பக்கம் —

மாலங்கோவைக் கண்டதுண்டோ ?

காமராசர் கணக்கு!

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

இந்த இலாக்கா எந்த வகையில் சமுதாயத்தை அபிவிருத்தி செய்யுமென்று நமக்குப் புரியவில்லை. அந்தந்த வட்டாரத்திலே இருக்கின்ற முக்கியஸ்தர்களை வைத்து இந்தத் திட்டத்தைப் பிரச்சாரம் செய்யச் சொல்கிருர்கள். தெற்கு வளர்கிறது என்று அவர்கள் எடுத்துரைக்கிருர்கள். தெற்கு வளர்கிறது, வளர்கிறது என்ருல் இந்தத் திட்டம் தென்ருட்டின் சமுதாய வளர்ச்சிக்கெனத் தீட்டப்பட்டதென்று அவர்கள் தவருகக் கருதிக்கொண்டிருக்கிருர்கள். வடநாட்டிலிருந்து தமிழகத்திற்கு ஒதுக்கப்படும் நிதித் தொகையில் எவ்வளவு வஞ்சகம் இருக்கிறதோ அந்த வஞ்சகம் இந்தத் திட்டத்திற்கு, மத்ய சர்க்கார் ஒதுக்கும் மானயத் தொகையிலும் இருக்கிறது. ஏனெனில் சமுதாய அபிவிருத்தித் திட்டம் இந்தியா முழுவதற்கும் தயாரிக்கப்பட்டிருப்பதால் வழக்கம்போல் தென்ருட்டைக் கடைக்கண்ணுல்தான் அவர்களால் பார்க்கமுடியும்! இதை உணராதவர்கள் இந்தத் திட்டம் தென்ருட்டு அபிவிருத்திக்கு மட்டுமே உருவாக்கப்பட்டதென்று பிழையான கணக்கைப் போட்டுக்கொண்டு பிதற்றி வருகிருர்கள்.

குறிப்பிட்ட ஒரு அபிவிருத்திக்கு-வளர்ச்சிக்கு மத்ய சர்க்கார் பாதித் தொகையும், மாநில சர்க்கார் கால் பகுதித் தொகையும், மிகுதித் தொகையைக் கிராம மக்களும் தரவேண்டும் என்பது திட்ட இலக்கணத்தின் ராஜவிதியாக இருக்கிறது. **கிராம மக்களுக்குப் பணம் கொடுக்க வசதியில்லாவிட்டால் அந்த ஊரிலே குறிப்பிட்ட திட்டம் நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகத்திற்குரிய விஷயமாகும்.** ஏனெனில் திட்டத்தின் பெரிய அதிகாரியை நிருபர் ஒருவர் இது பற்றிக் கேட்ட கேள்விக்கு அவர் கடைசி வரைக்கும் பதில் தெரிவிக்கவில்லை. ஏழைகள் நிறைந்த கிராமங்கள்-சர்க்காருக்கு, திட்டத்திற்கென பங்கீட்டுத் தொகையை கொடுக்க வசதியில்லாத கிராமங்கள் – இந்தத் திட்டத்தின் விதிப்படி; பள்ளிக்கூடமில்லாமல் தவிக்கத்தான் வேண்டும். மோட்டாரைப் பார்க்க அவர்களுக்கு மார்க்கமில்லை. இன்னும் காந்தியார் இருக்கிருர் என்ற அளவுக்குத்தான் அவர்களுக்கு அறிவு இருக்கும்.

★

இந்திய அரசியலாரின் இந்த அபிவிருத்தித்திட்டம் விவசாயிகளுக்கு தேடக் கிடைக்காத தெய்விக உதவிகளையெல்லாம் செய்துவருவதாக சர்க்காரின் பிரசார இலாக்கா அறிவித்து வருகிறது. உண்மை அதுவல்ல! ஓய்வுக்கும் வசதிக்கும் மண்வளத்திற்கும் ஏற்ற வகையில் உழைத்து வந்த உழவர் பெருமக்களை, ஏட்டுக்கணக்கைக் காண்பித்துஉற்பத்தியைத்தடைசெய்ததில் பெரும் பங்கு இந்த இலாக்காவைச் சேர்ந்ததாகும். காலையில் 10 மணிக்குப் போய் மாலை 5 மணிக்குத் திரும்பும் சர்க்கார் ஆபீஸ் குமாஸ்தா வேலையைப்போல் உழவர்களை ஆட்டிப் படைத்ததால் இந்த வினை வளர்ந்தது. குறைந்த உழைப்பில் அதிகப்படியான பலனைத் தரும் திட்டத்தை சர்க்கார் தீட்டினுல் யாரும் வரவேற்பார்கள். ஆனல் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் விவசாய முறைகள் உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைத் தராதவையாக இருக்கின்றன. மூன்று நாளில் செய்கின்ற வேலையை, சர்க்கார் ஒன்பது பிரிவாகப் பிரித்து ஒன்பது நாளைக்கு அந்த வேலையை வளர்த்தால் விவசாயம் எந்த வகையிலே வளரமுடியும்? வேறு வேலையே இல்லாமல் காடு கழனிகளிலேயே படுத்துக் கிடந்தால் சர்க்காரின் இந்த டாக்டர் உத்தியோகத்தைப் பார்க்கலாம். அப்படிப் பார்த்தாலும் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா என்பது சந்தேகந்தான்!

பத்திரிக்கை நிருபர்களின் சுற்றுப் பயணத்தில், சில இடங்களில்திட்டத்தாரின் விவசாய முறைகள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கின்ருர்கள்.

"பன்னெடுங் காலமாக நாங்கள் விவசாயம் செய்துவருகிறோம். சர்க்கார் அதிலே தலையிட வேண்டியதில்லை. சூட்டும் கோட்டும் போட்டவர்கள், உழுகின்ற இடத்திலேயும் வந்து தொல்லை கொடுக்க வேண்டாம். எங்களுக்குக் கிடைக்காத கல்வி வசதியை, போக்குவரத்து வசதியை, குடியிருப்பு வசதியை மட்டும் சர்க்கார் செய்துகொடுத்தால் போதும். விவசாயத்திலேயும் இவர்கள் தலையிட்ட பிறகுதான் அந்த வளர்ச்சியும் தளர்ந்தது. ஏனே தெரியவில்லை காங்கிரஸ்காரர்கள் தொட்டது துலங்குவதில்லை." என்று ஒரு பழுத்த விவசாயி தெரிவிக்கிருர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு வசதி என்று சொல்லி பல வட்டாரங்களில் "அரிசன் காலனி" பெயரால் நிறுவினுர்கள். அவர்கள் கட்டிக் கொடுத்த வீடுகள் ஓராண்டுக் காலத்திற்குமேல் நிலைக்கவில்லை. சட்ட மன்றத்திலேகூட அறிஞர் அண்ணு அவர்கள் இதை எடுத்துரைத்திருக்கின்ருர்கள். யாராவது ஒரு கதர் சட்டை போட்டவருக்கு அப்பேர்ப்பட்ட குடியிருப்புக் கட்டடங்கள் குத்தகைக்கு விடப்படுவதால் இத்தகைய தீவினைகள் விளைகின்றன. காந்தீயத்தின் பெயரால் குத்தகைகாரரின் பை நிரம்புகிறது. காமராசரின் பெயரால் கட்டடம் தோன்றி இடிகிறது.

★

இந்தத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கை, ஏழைகளை, சர்க்காருக்குக் கடன்காரர்களாக்கி அவர்களை அடிமைப்படுத்துவதாகும். சர்க்கார் இடும் கட்டளையைத் தலை தாழ்த்தி நிறைவேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட 'தூண்டில் முள்' திட்டம்தான் இந்த சமுதாய அபிருத்தித் திட்டம். இதனுல் அந்தந்த வட்டாரப் பொது மக்களின் நேரம் விரையமாகிறது. ஒரே நேரத்தில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் கட்டாய சரீர உழைப்பு தேவை என்கிருர்கள். அதேபோது விவசாய நிபுணர்களின் நுணுக்க வேலைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகிருர்கள். குறிப்பிட்ட ஒரு கிராமத்திலிருக்கின்ற ஒரு விவசாயக் குடும்பம் அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்திற்கு சரீர உழைப்பைத் தருவதா? பசியைப் போக்கும் விவசாய வேலைகளைப் பார்ப்பதா? நமக்குப் புரியவில்லை! கட்டாய உழைப்பிலே பங்கு கொள்ளாவிட்டால் பள்ளிக்கூடம் இல்லை என்கிருர்கள். விவ்சாயத்துறை நுணுக்கங்களை பின்பற்ருவிட்டால் விவசாயிகளுக்கு கடன் சலுகை இல்லை என்று சொல்லுகிருர்கள். பாவம்! ஒன்றுமறியாதவர்கள் சர்க்காரின் இந்தத் திட்ட இலாக்காவில் சிக்கி அவதிப்படுகிருர்கள்.

சமுதாய அபிவிருத்தித் திட்டம் அமலாகி இருக்கும் பகுதிகளில் **வாழும் ஊராண்மைக் கழகத்தில் அவர்களுக்கு** இதனுல் கொண்டாட்டமாக இருக்கிறது. **மண்டலக் காங்கிரஸ் கமிட்டி தலைவர்களுக்கு** வாழ வகை ஏற்படுகிறது. செல்வாக்குள்ள **பெரியதனக்காரர்களுக்கு** மேலும் செல்வாக்கு வளர வழிகள் உண்டாகின்றன. சர்க்கார் பணத்தை வாங்கி, தங்களுடைய சிபார்சிலே வாங்கிக் கொடுப்பதைப் போல் கொடுத்து, பலநூறு ஏழைகளுக்கு மத்தியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள **தேசீயத் தம்பிரான்கள்** சின்ன முதலாளிகளாகப் பட்டயம் பெற்றுவிடுகின்ருர்கள். வந்தேமாதரம் போடுகிறவர்கள்தான் இந்தத் திட்டத்தால் பலன் அடைவார்கள். **அவர்கள்தான்** இந்த நாட்டின் பிரஜைகளாகக் கருதப்படுகிருர்கள். மற்றவர்களுக்குச்சலுகைகள்இல்லை. சர்க்கார் பணத்தைச் செலவு செய்து காங்கிரஸ் கட்சிக்குப் பெயர் சம்பாதிப்பதற்கு இந்த இலாக்காவை நிறுவியிருக்கிருர்கள். சாணைக்கல் தேய்வதுபற்றிக் கவலையில்லை, கத்தி பதம் பெற்ருல் போதுமென்று காமராசர் கருதுகிருர். அவருக்கு விடை துள்ளிதமாகக் கிடைக்குமா என்ருல்-சந்தேகமில்லை, – தென்ருட்டின் கைதேர்ந்த அரசியல் வியாபாரி இந்தத் தொழிலில் பெரும் நஷ்டமடையப் போகிருர்! ஊரார் உழைப்பில், ஊரார் பணத்தில் சர்க்காருக்குச் சொத்துச் சேர்க்கும் மோசடி வேலையில் இன்றைக்குக் காங்கிரஸ் அடியெடுத்து வைத்திருக்கிறது. கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் காங்கிரஸ் சர்க்கார் மக்கள் என்ற மகேஸ்வரனிடம் கருணையை எதிர்பார்க்கிறது. குருவி தலையில் நெல் மூட்டையை வைப்பதைப்போல் ஒன்றுமறியாத ஏழைகளின் மத்தியில் ஒரு டஜன் அதிகாரிகளைப் புகுத்தியிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில் ஜாதி ஒழிப்பைப் பற்றிப் பிரச்னையே இல்லை. இது காமராசருக்குப் பெரிய அபகீர்த்தி. வேலையில்லாத செல்லப் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டிய பாடங்களை, பொழுதைப் பொன்னுகக் கருதும் பொதுமக்களுக்கு கற்பிக்க எண்ணும் சர்க்காரை, அவர்களின் மூளையை, நாம் என்ன சொல்வது?

காங்கிரஸ் சர்க்கார் சாதிக்கிறது என்போர், ஏதோ காங்கிரஸ் தலைவர்கள் அவர்களுடைய சொந்தச் சம்பாத்தியத்திலிருந்து கொடுப்பதாகக் கருதிக்கொண்டிருக்கிருர்களா? காமராசருக்குப் பதிலாக ஒரு சோமயாஜுலு வந்தாலும் அவர்கள் பொது மக்களுக்கு எதுவும் செய்யவில்லையானுல் யாரும் அவர்களை மதிக்க மாட்டார்கள். காங்கிரஸ்தான் நாட்டை உய்விக்கிறது என்று கூறும் காங்கிரஸ்காரர்கள், ஏன் வெள்ளையனை வெளியேறச் செய்தார்கள்? அவன்தான் மின்சாரத்தைக்கொண்டு வந்தான்; அவன்தான் ரயிலை ஓட்டிக் காண்பித்தான்; அவன்தான் தபால் இலாக்காவை உண்டாக்கினுன்; அப்படிப்பட்ட வெள்ளைக்காரனை ஏன் இவர்கள் போகச் சொன்னுர்கள்? ★

எஸ்.எஸ்.தென்னரசு

நாசர் பாடம்

பொதுவுடமை என்றாலே குழப்பம் என்போம்
பொறுத்திருந்து பார்ப்போர்க்குப் புரியும்! இன்றும்
சதிபுரிவார் தீயிடுவார் சொந்த நாட்டை
தரகர்களாய் அன்னியர்க்கே அடிமை செய்வார்
புதுமை,பொது உடமைஎன வாயில் மாக்கள்
போலிமொழி யாடிடுவார்! எந்த நாளும்
கதிரறுக்கும் அறுவாளால் கழுத்த றுப்பார்
கயவரிவர்! துரோகத்தில் கட்சி கண்டோர்!

பாசத்தின் பிணைப்பெனவே சோவி யத்தின்
பக்கத்தில் இருந்தவர்தான் நாசர்! அந்தத்
தேசத்தின் தலைமகனைக் கூட இந்தத்
தீக்கூட்டம் விடவில்லை! அரபு நாட்டின்
தேசீய ஒற்றுமையைக் குலைக்கும் வண்ணம்
செப்பரிய சூழ்ச்சிகளைச் செய்தும் ஈராக்
வாசலிலே அன்னியரை வரவ ழைக்கும்
வகைகெட்ட செய்கையினைச் செய்தும் வாழும்!

தோழர்களைப் பழிவாங்கும் நடவ டிக்கை
துரோகிகளுக் குடன்பாடே! சோவி யத்தின்
தோழரெனப் பேர்பெற்ற நாசர் இந்தத்
துட்டர்களின் செயல்கண்டு மனங்கொ தித்தார்
கோழைகளின் திருக்கூட்டம் வளர விட்ட
குருசேவும் தன்னுருவைக் காட்டிக் கொண்டான்
ஆழியலை போன்றெழுந்த அரபு மக்கள்
அன்னியரின் பொம்மைகளை அழிப்பார்! வெல்வார்!

அன்னையரே! பெரியோரே! தாய கத்தின்
அருள்மணலில் விளையாடும் தமிழ் மக்காள்!
இன்னுமொரு புதுப்பாடம் தேவை யில்லை
ஏகாதி பத்தியத்தின் கையாட் கள்தான்
தன்னகத்தை மாய்ப்பார்கள்! தரணிக் கிந்தப்
பொன்னுரையைத் தருகின்றார் அரபு மக்கள்!
"தன்னாட்டைத் தானாள நினைப்ப வர்க்குத்
தடைக்கல்லே பொதுவுடமைத் தோழர் கூட்டம்!"

★

கண்ணதாசன்

என்னைப் பிரித்தாள்!

நேரிழை ஒருத்தி என்பால்
நேசமாய் இருந்தே வந்தாள்
யாரவட் கீடு என்றே
அகமிக மகிழ்ந்தி ருந்தேன்
பேரழ குடையா ளாள்நான்
பெருமையே கொள்ளும் போதில்
பேரிடர் வந்த தாலே
பிரித்தனள் என்னை அன்னாள்

அவளது அன்பில் எந்தன்
ஆவியைச் சேர்த்தே வைத்தேன்
தவமிகச் செய்தே னென்றே
தருக்கொடு வாழ்ந்தே வந்தேன்
பாவிதான் என்னைப் போலே
பாரினில் எவரே உண்டு
காவிதான் அணியச் செய்தே
கத்தரித் தாளென் னுறவை!

அணியெது மில்லா என்னாள்
அன்பினை அணியாய்க் கொண்டாள்
பணிதனில் நாட்டம் கொள்ளும்
பக்குவம் அறிந்த மங்கை;
பிணியதை நீக்கி அன்பைப்
பெருக்கிடும் நெஞ்சே கொண்டாள்.
கண்ணிலே நீர்தான் நண்ணக்
கடிதினில் பிரித்தா ளென்னை!

"துன்பினை எய்தும் போதில்
துடைத்திட வாராக் கிளைஞர்
இன்பமே கொள்ளுங் காலில்
இடரினைத் தருவார்! உண்மை"
என்றுதான் சொன்னே னந்த
ஏந்திழை யிடத்தே நானும்
சொன்னவச் சொல்லை விட்டே
தோகையாள் பிரித்தா ளென்னை!

என்னதான் குற்றம் நானும்
ஏந்திழைக் கிழைத்தேன்? ஐயோ!
கன்னலைப் போலே மொழியாள்
கோபமும் ஏன்தான் கொண்டாள்?
இன்னலை மறந்தே மங்கை
எழிலிலே வைத்தே னுயிரை
பின்னரும் ஏன்தான் அன்னாள்
பிரித்தனள் என்னை இந்நாள்?

★ தமிழ்ப்பித்தன் ★

ஏக இந்தியப் பாவைக் கூத்து!

சரியாக முன்னூற்றி அறுபத்திநான்கு நாட்கள்; இருபத்திமூன்று மணி நேரம்; ஐம்பத்தி ஒன்பது விநாடிகள், அன்ன ஆகாரமின்றி, இரவு பகலாக விழியை இமைமூடாமல் மிகுந்த சிரமப்பட்டு பல புள்ளி விபரங்களைச் சேகரித்து ஆராய்ச்சி செய்ததில் கிடைத்த அரிய கருத்துக்கருவூலம்.

இவ்வளவு சிரமப்பட்டு ஆராய்ச்சி செய்த பேரறிஞர் யார்?

அதன்மூலம் கிடைத்த கருத்துப் படையல் என்ன?

அத்தகு பெருமைக்குரியவர் நமது விவசாய மந்திரி திருவாளர் பக்தவத்சலம்! அவர் ஆராய்ச்சிமூலம் வடித்துத் தரப்பட்ட கருத்து இது—

"இந்த ஆண்டு உணவு தானிய விலைகள் "றெக்கை" கட்டிக் கொண்டு ஏறிக்கிடப்பதற்குக் காரணம் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது! முன்பு சோளம், கம்பு, கேழ்வரகு இவைகளையே உணவாகக் கொண்டிருந்தவர்கள் இப்பொழுது அதை விடுத்து அரிசிச்சோறு சாப்பிடத் தலைப் பட்டுவிட்டார்கள்."

பக்தவத்சலம் அவர்களின் ஆராய்ச்சியின் முடிவான தீர்ப்பு இது.

நடுத்தரக் குடும்பத்தினர் ஒருவர் சென்ற ஆண்டில், தன் வருமானத்தில் குடும்பச் செலவு போக மாதம் பத்து ரூபாய் மீதப்படுத்தி வந்தாரென்றால், இந்த ஆண்டு அதே வருமானம் இருந்தும் சல்லிக்காசுகூட மீதப்படுத்தமுடியவில்லை. மேலும் கடனாளியாகியிருக்கிறார். காரணம், வருமானத்தில் குறைவா, என்றால் இல்லை! சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உணவு தானிய விலைகள் இரண்டு மடங்கு அதிகமாகியிருக்கிறது! உணவுதானிய விலைகள் ஏன் அதிகமாகியிருக்கிறது? விளைச்சலில் ஊனமா என்றால் அதுவும் இல்லை. சர்க்காரின் கணக்குப்படி விளைச்சல் அதிகமாகவேயிருக்கிறது. விளைச்சல் ஏராளம். விலையோ இரண்டு மடங்கு தூக்கலாகியிருக்கிறது. இதற்கு என்னதான் காரணம்? சரியான காரண காரியங்களோடு விளக்கம் தரவேண்டிய பொறுப்பிலிருப்பவர் விவசாய மந்திரி—அவர் சொல்லுகிறார், எந்த மிட்டா மிராசும், நிலப்பிரபுக்களும், களத்திலே கதிரை விட்டு நெல்லைப் பிரித்தவுடன், சரக்கை, வெளிவிடாமல் மூட்டை மூட்டையாய் கட்டிப் போட்டு வைத்து. வெளியில் நெல் அரிசி இவைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் அதிக விலைக்கு விற்கலாம் என்ற லாப நோக்குடன் தானியங்களைப் பதுக்கி வைக்கவில்லையாம்; சர்க்காரே உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து மக்களுக்கு நியாய விலைக்கு வழங்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் அதிர்ச்சியடைந்து, சர்க்கார் கொள்முதல் செய்கிறது என்றால் நியாயமான விலைக்குத்தானே கொடுக்க இயலும்; கையிருப்பும் இல்லை என்று சொல்லமுடியாதே என்ற கவலையில் நெல் மூட்டைகளை ஆயிரக்கணக்கிலே பாதாளக் கிடங்குகளில் போட்டுப் பூட்டிச் சிறை வைத்துவிடவில்லையாம்.

தென்மண்டல உணவுக் கமிட்டியிலே இடம்பெற்றிருக்கிற கேரள சர்க்கார், உணவு தானியங்கள் தமிழ்நாட்டிற்குப் போக உபரி இருக்கிறதா என்று அந்த மாநில சர்க்காரிடம் கேட்காமல் ஒன்றுக்குப் பத்தாக விலை அதிகம் கொடுத்து தஞ்சையிலும் வேறு பல இடங்களிலும் களத்துமேட்டிலேயே நெல் கொள்முதல் செய்து, லாரி லாரியாக ஏற்றியனுப்பியதாலெல்லாம் விலைவாசி உயர்ந்து விடவில்லையாம். பிரதி வருஷமும் ஜனத்தொகை அதிகரித்து வருவதால்தான் உணவு தானிய விலைகள் விஷம்போல் ஏறுகின்றனவாம். எந்தக் கணக்கை ஆதாரமாகக் கொண்டு ஜனத்தொகை அதிகமென்கிறார் என்பது நமக்கு விளக்கப்படவில்லை.

இந்த ஆண்டு தமிழகத்தில் புதிதாகப் பிறந்துவிழுந்தவர்களின் தொகை இவ்வளவு; இப்பொழுது இருக்கிற ஜனத்தொகையோடு இவர்களையும் சேர்த்துக்கொண்டால் மொத்தக் கணக்குப்படி ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. விலைவாசி ஏற்றத்துக்கு **இந்த ஜனத்தொகைதான்** காரணமென்றால் பிறந்த உடனேயே சோறு சாப்பிடும் குழந்தையை, நாம் இதுவரை பார்த்ததில்லை. இந்த ஆண்டில் தான் அரிசிச்சோறு சாப்பிடுகிற அளவுக்கு வயதை ஒத்துள்ள குழந்தைகளாகப் பிறந்திருக்கின்றன என்ற அதிசயத்தையும் நாம் கேள்விப்பட்டதில்லை. ஒருவேளை பக்தவத்சலத்திற்கு மட்டும் இப்படி ஒரு "ரிப்போர்ட்" வந்திருக்கலாம்.

புட்டிப்பால், விலை உயர்ந்திருக்கிறது. ஆர்லிக்ஸ் விலை உயர்ந்திருக்கிறது இதற்குக் காரணம் பிரதி வருஷமும் ஜனத்தொகை அதிகரிப்பு என்றால் நாம் ஒப்புக்கொள்ளலாம். உணவு விலை ஏற்றத்திற்கு இதைக் காரணமாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

இங்கிருந்து பர்மா, மலாயா, இலங்கை, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு பிழைக்கச் சென்ற தமிழர்கள் அத்தனை பேரும் அங்கிருந்து மூட்டை முடிச்சுகளுடன் தமிழகத்தில் வந்து இறங்கிவிட்டார்களா என்றால், அப்படி ஒன்றும் நெருக்கடி ஏற்படுகிற அளவுக்கு மொத்தமாக அவர்கள் வந்து குவிந்துவிடவில்லை.

சர்க்கார் இரண்டு லட்சம் டன் உணவு தானியம் கொள்முதல் செய்யப்போவதாக அறிக்கை விடுத்திருக்கிறார்கள். அதற்காக அதிகாரிகள் கொள்முதல் செய்ய களத்து மேட்டுக்கே வரலாம் என்று தெரிந்தவுடன், தேவைக்குமேல் கையிருப்பு வைத்திருக்கும் அத்தனை நிலப்பிரபுக்களும், மொத்த வியாபாரிகளும் தானியத்தை பதுக்க வேண்டிய இடத்திலே பதுக்கி வைத்துவிட்டார்கள். பதுக்கி வைத்திருக்கும் ஆசாமிகள் யார்? எங்கே மறைத்து வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் விவசாய மந்திரிக்கு நன்றாகத் தெரியும். தெரிந்தும் அவர்களையெல்லாம் அதட்டிக் கேட்கமுடியாத நிலையிலிருக்கிறார் பக்தவத்சலம். அவர்களெல்லாம் தேர்தல் காலங்களிலே காங்கிரஸ் கட்சிக்கு நன்கொடை என்ற பெயரில் காலணாக்கூட பிரதிபிரயோசனத்தை எதிர்பாராமல் (பெர்மிட், லைசன்ஸ், காண்டிராக்ட் இவைகளைத் தவிர) லட்சக்கணக்கிலே வாரி வழங்கிய பாரிவள்ளல்கள். இவர்களைப் பார்த்து விளைச்சல் எவ்வளவு, மீதம் எங்கே என்று கணக்குக் கேட்டு, தேர்தல் காலங்களில் காங்கிரசின் மானத்தைக் காப்பாற்றும் இந்த மகானுபவர்களைப் பகைத்துக்கொள்ள விரும்பாத பக்தவத்சலம். விலைவாசி உயர்விற்கு எதை எதையோ காரணம் காட்டுகிறார்!

அடுத்து, தஞ்சையிலிருந்து கேரளத்திற்கு அதிகப்படியாக போய்க்கொண்டிருந்த, நெல் வெளியேற்றத்தை டெல்லி சர்க்காரிடம் முறையிட்டு தடுத்து நிறுத்திய நிதியமைச்சரைப் பாராட்டி வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார் பக்தவத்சலம். இது, ஒரு வகையிலே நமக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும், இந்தப் பிரச்சினைக்காக சுப்பிரமணியம் எத்தனை முறை டெல்லிக்குப் பறந்திருக்கிறார், எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறார் என்பது நமக்குத்தெரியும். நேரு பண்டிதரைக் காண டெல்லியிலே—

இரண்டு நாள் காத்து...
இருந்து முகம் பார்த்து
எழிலான பல் காட்டி
தண்டனிட்டேன் சாமி!
சொல்வதை
தவறாக எண்ணாதீர்.
கேரளத்தார் நெல்லை
கேளாமல் வண்டியிலே
ஏராள மாய்வாங்கி
ஏற்றி யனுப்புகிறார்!
தமிழ்நாட்டில்...
உலைக்கு அரிசியில்லை
உமிகூட மிச்சமில்லை
வறுமை வறுமையய்யா
வாய்மூடி நாமிருந்தால்
தனித்த செல்வாக்கில்
தமிழ்நாட்டில் வளர்ந்துவரும்
தி. மு. க என்ற கட்சி
தங்களுக்குத் தெரிந்திருக்கும்
கூட்டத்தைக் கூட்டி
கூவிடுவார் விரிவாக
வருகின்ற நேர்தலில்
ஓட்டு நமக்கு இல்லை!
உள்ளதைச்சொல்லிவிட்டேன்
— இனியும்
ஊமையாய் இருக்காதீர்!
இதில்கூட வெற்றி
இல்லாமல் நான்போனால்
எதிர்க்கட்சி முகத்தில்
எப்படித்தான்
போய்விழிப்பேன்
மூக்காடு இல்லாமல்
போகவே முடியாது.
தண்டனிட்டு, சாமி!
தாள் பணிந்து கேட்கின்றேன்
ஓடுகின்ற நெல்லை
உடனே நிறுத்தும்படி
பஞ்சசீல வாயாலே
பால்வடியச் செப்பிடுவீர்
சரணம்! சரணம்! சரணம்!

என்று சுப்பிரமணியர்-துதி பாடிய பிறகுதான், நேரு பண்டிதர் மனம் இறங்கி அஞ்சாது போய் வாரும்; மிஞ்சாது போகின்ற தஞ்சாவூர் நெல்லை தடுத்து நிறுத்துகிறேன் என்று அபயம் அளித்திருக்கிறார். பண்டிதரின் பாதங்களை முத்தமிட்ட பிறகு கிடைத்த இந்த அரைகுறை வெற்றியைக் காட்டி, எங்களை டெல்லியின் எடுபிடி என்றீர்களே; எங்களால் எதையும் சாதிக்கமுடியாது என்றீர்களே; பார்த்தீர்களா எங்கள் குரலுக்கும் டெல்லி மதிப்பளித்திருக்கிறது என்று மார் தட்டுகிறார் பக்தவத்சலம்.

தென் மாநிலங்களில் ஏற்படுகிற உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்கு தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, மைசூர் இந்நான்கு மாநிலங்களும் சேர்ந்து **தென் மண்டல உணவுக் கமிட்டி** என்ற ஒரு கூட்டு முறையை அமைத்திருக்கிறார்கள். இந்த அமைப்பின் நோக்கம் பற்றுக்குறையால் வாடுகிற மாநிலங்களுக்கு உபரி வைத்திருக்கிற மாநிலம், நியாயமான விலைக்கு உணவு தானியங்களைக் கொடுத்து உதவ வேண்டும் என்பது. இந்தக் கொள்கையைச் செயல்படுத்தும் வகையில் தென் மாநிலங்கள் நடந்துகொள்கின்றனவா என்பது ஒரு புறமிருக்க, இவைகளுக்கு நீதிபதியாக அமர்ந்திருக்கும் டெல்லி சர்க்கார், இந்த அமைப்பை வளரவிடாமல் செய்வதற்கும், மாநிலங்களுக்கிடையே இருந்துவரும் நல்லுறவை முறித்து மனக்கசப்பை ஏற்படுத்தும் சூழ்நிலையை மெல்ல மெல்ல உண்டாக்கி வருகிறார்கள். எடுத்துக் காட்டாக ஒன்று. கேரளம் ஒரு பற்றுக்குறை மாநிலம். ஏறக்குறைய தமிழ்நாடும் அதே நிலைதான். இதில் தேவைக்குப் போக அதிகப்படியான உபரி வைத்திருக்கிற மாநிலம் ஆந்திரா! மண்டலக் கமிட்டியின் கூட்டு விதிப்படி பற்றுக்குறை மாநிலங்களுக்கு ஆந்திரா உதவ வேண்டும். இங்கேதான் டெல்லி அரசு தன் சூதுத் திட்டத்தை சூழ்ச்சி வலையை மறைமுகமாக விரிக்கிறது. ஆந்திர மொத்த வியாபாரிகளிடம் டெல்லி சர்க்காரே நேரடியாய், இரண்டு மடங்கு அதிக விலை கொடுத்து தானியங்களை கொள்முதல் செய்து பீகார், ஒரிசா, உத்திர பிரதேசம் போன்ற வடக்கத்திய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கிறது. டெல்லிக்கு விற்றால் அதிக லாபம் கிடைக்குமே என்ற நப்பாசையில், பற்றுக்குறை மாநிலங்களுக்கு தானியங்களை நியாயமான விலைக்குத் தர ஆந்திர வியாபாரிகள் மறுக்கிறார்கள். சர்க்காருக்குப் பயந்து பதுக்கி வைக்கிறார்கள். கள்ளச் சந்தையிலே பேரம் பேசுகிறார்கள். ஆந்திராவின் நிலைதான் இப்படி என்றால, இங்கே கேரளம் கேளாமலேயே நெல்லை வாரிக்கொண்டு போகிறது. இந்த இரண்டுக்குமிடையில் நீதி கோரி டெல்லிக்கு ஓடுகிறார்கள் தமிழ்நாட்டு அடிமைகள்-அமைச்சர்கள்.

நேரு பண்டிதரைச் சந்தித்து-உபரி வைத்திருக்கிற ஆந்திராவைக் கொடுக்கச் சொல்லுங்கள், கொடுக்கச் சொல்லுங்கள் என்றும், வாரிக் கொண்டு போகிற கேரளத்தை நிறுத்தச் சொல்லுங்கள்; நிறுத்தச் செல்லுங்கள் என்றும் முறையிடுகிறார்கள். இந்த முறையீடு பயனளிக்காது - நீதி கிடைக்காது என்பது நமக்கு நன்றாகத் தெரியும்.

எத்தனை முறை சென்று காரிய சித்தியில்லாமல் குட்டுப்பட்டுத் திரும்பினாலும், டெல்லியை எதிர்க்கும் துணிவு தமிழ்நாட்டு அமைச்சர்களுக்கு இல்லை. எதிர்த்துப் போராடினால், ஏக இந்திய அமைப்பில் சலசலப்பு ஏற்பட்டுவிடுமே என அஞ்சி வடநாட்டுத் தலைவர்கள் ஆட்டி வைக்கும் கோணங்களிலே ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஏக இந்திய ஒற்றுமை என்ற "**பாவைக் கூத்து**" நடைபெறுகின்றவரை, வரம்புக்கு மீறிய அதிகாரங்கள் டெல்லிக் கோட்டையிலே குவிந்து கிடக்கின்றவரை, தென்மாநிலங்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு டெல்லி அமைச்சர்களின் கைகளில் அடங்கி இருக்கும்வரை தமிழகம் - திராவிடம் எந்தத் துறையிலும் வாழ்வும், வளம் பெறவும் முடியாது என்பதும் உறுதி! உறுதி! உறுதி!

-தினகரன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன் ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 5 | 21—3—59 | இதழ் 40

சர்க்கா சர்க்காரின் "சுதந்திரம்"

"கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும் வகை கிடைத்த மரநிழலே! கார்ப்பரேஷன் குழாயிலே வழிகின்ற மீன்சுவைத் தண்ணீரே! நடை பாதையிலே வீசுகின்ற தூசிப்புயலே! உங்களை எல்லாம் பிரிந்து கட்டையுடன் கிண்டி மாளிகை செல்வது எந்நாளோ?

அங்கே வானத்துத் தங்க நிலாக்களைத் தோற்கடிக்கும் ஒளிக் குன்றங்கள் பலவுண்டாமே! கவர்னரின் பட்டுப் பாதம் கெட்டுவிடாமல் நடந்து செல்ல, காஷ்மீரத்துக் கம்பளம் விரித்தாற்போல், பூக்களைக் கொட்டும் காவனம் விழியையும் நாசியையும் பறிக்குமாமே! தன் விளிம்பிலே உட்கார்ந்து காதல் கீதம் இசைக்கத் தூண்டும் வண்ண நீரூற்றுக்கள் பல உண்டாமே! துள்ளி ஓடும் மான்களும், தத்தித் திரியும் கிள்ளைகளும், தனிப் பெரும் அளப்பரும் கூத்தாமே! அறுசுவை அன்னம் உண்ணச் சொல்லி, ஆய்ந்து தேர்ந்து பார்த்துத் தருவராமே மருத்துவர்களும் சமையல்காரர்களும்!

தனி ஒரு மனிதன் நலனுக்காக, அரசினர் காட்டும் அக்கறை—அவர் வெய்யலில் வாடிடக்கூடாது; நடந்து உடலை அலட்டிக்கொள்ளக்கூடாது என்பதற்கெல்லாம் அவர்கள் காட்டும் ஆர்வம் ஆகிய, அத்துணையும் எனக்கும் கிடைக்காதோ? கிடைக்கும்! கிடைக்கும்! ஆட்சி நமதானால் கட்டாயம் கிடைக்கும்!"

நாளெல்லாம் இப்படி வாடி வதங்கிப் பகற் கனவுகளிலே திளைத்து ஆகாயக் கோட்டை கட்டும் விந்தை மனிதர்களை அன்றுடம் நாம் சந்திக்கத்தான் செய்தோம், பத்தாண்டுகளுக்குமுன். தீவட்டித் தியாகியாரும் விருதை மௌன குருவும் இப்படி ஆட்களைக் கண்டுவிட்டால் போதும்; உடனே தம் செந்நாக்களைச் சுழற்றி வளைத்துப் பேசத் தொடங்கிடுவர்.

"கேட்டீரோ இக்கொடுமையை! கண்டீரோ இப்பஞ்சைப் பாமரனை! நம் நாட்டவன்; வாழ வேண்டியவன்; உரிமை உள்ளவன்—இவன். ஆனாலும் பட்டினி கிடந்து மாய்கிறான் நடை பாதையிலே. இவன்போன்ற பல்லாயிரம் மக்கள் வாழ்க்கையை நடத்தக்கூடிய அளவு பணத்தை தனி ஒரு மனிதனுக்குக் கொட்டித் தீர்க்கின்றனர்! கவர்னர் என்றும் வைஸ்ராய் என்றும் வருகின்ற பரங்கிக்கெல்லாம் தருகின்ற பணத்தைக் கொண்டு நமக்கே பயன்படுத்தினால்... ஆடம்பரச் செலவு அழிக்கப்படுகிறது என்பது மட்டுமன்று; நம் பொருள் நமக்கே ஆவதும் நடக்கிறது. இதற்கு ஒரே வழி—ஒழிக வெள்ளையன்! அழிக அவன் ஆட்சி! அகலுக கவர்னர் பதவி!"

இப்படி எல்லாம் முழங்கிச் செவியைக் கிழித்த தியாகக் குன்றுகளை, மக்கள் அத்துணை எளிதில் மறந்திருக்கமுடியாது!

கவர்னர் ஆட்சியால் அந்நிய ஆதிக்கம் வலுப்படுத்தப் பெறுகிறது!

கவர்னரின் உல்லாச வாழ்க்கையால், செல்வம் பாழாகிறது!

கவர்னர் பதவி பொம்மலாட்டக்காரன் பதவி; வேண்டாதது!

இப்படியும், இதற்கு மேலும் கொக்கரித்தனர் அன்று, பாரத மணிக் கொடியின்கீழ் அணிவகுத்திருந்த இரத்தினங்கள்!

"சுதந்தரம் மலர்ந்தால் அமைதி நிரந்தரம்! 500 ரூபாய்க்குமேல் செப்புக் காசும் வாங்கமாட்டான் எவனும்! சுதந்திர வீரன் தன் வியர்வையால் உங்கள் அவலத்தைத் துடைப்பான். தன் தோலை உங்கட்குச் செருப்பாய்த் தைத்துப் போடுவான். கூனிக் குறுகிக் கிடக்கும் உங்கள் உடல் நிமிர்த்தும் ஊன்றுகோலாய்த் தன் எலும்பைத் தருவான்" என்றும் சொல்லினர்.

இப்படியும் பேசியோரின் "சர்க்கா சர்க்கார்" அமைந்து ஆண்டுகள் 12 ஆகிறது. கதிரவனைக் கண்ட பனியைப்போல், அனலைக் கண்ட ஸ்னேவைப்போல், தங்கள் கவலைகள் அத்துணையும் மறைந்துவிடும் என்றெண்ணியோரின் ஆசைதான் சிதைந்தது, புயலிடைப்பட்ட கலமாய்.

நடை முறையில் காணப்படுகின்ற பண்டிதர் தர்பார் பரங்கிக்கு எள்ளளவும் குறையவில்லை. தியாகிகள் கொற்றமும் அவர் தம் சுற்றமும் சொன்னவற்றை மறந்துதான் விட்டனவோ, யாதோ?

கவர்னர் பதவி ஒழிக்கப்படவுமில்லை; அவரது செலவுகளும் குறைக்கப்படவில்லை; அவரது அதிகாரமும் தட்டப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகள் எனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ்காரர்கள் செய்யும் முடிவையும் அவர் தூள் தூளாக்கலாம். கொலுப் பொம்மையாக, தர்பாருக்குள் நுழைந்து வீற்றிருந்துவிட்டு, கையெழுத்துப் போடும் அச்சீமான் எதைச் செய்தாலும் அதை ஆமோதிக்கும் தில்லி அரசு

மக்கள் நம்பிக்கையைப் பெறமுடியாதார் ஆட்சி மன்றம் வரக்கூடாது என வெள்ளை கவர்னர்களைப்பற்றிச் சீறிய இந்தத் தொண்டர்களின் ஆட்சியில் பொதுத் தேர்தலில் தோற்றவருக்கெல்லாம் கவர்னர் பதவி தந்துவிடுகின்றனர். அதிலும் நம் மாநில கவர்னரோ, முன்பு தன் அமைச்சரவையைத் திறமையோடும் பொறுப்போடும் கட்டியாளமுடியாது, குழப்பங்களைப் பெற்றுப் போட்ட முதன் மந்திரியாயிருந்தவர். தன் மாநில முதல் அமைச்சர் பதவியையே காப்பாற்றிக்கொள்ளத் திறமில்லாத அவருக்கு மற்றொரு மாநில முதலமைச்சரை அடக்கி ஆளும் வாய்ப்பும் பதவியும் தரப்பட்டிருக்கின்றன. அந்த ஊழலின் பெயர்தான் கவர்னர் பதவி!

அந்த வடநாட்டு ஆதிக்கத்தின் சின்னம் ஏறத்தாழ ஒரு குட்டி தர்பாரே நடத்துகிறது. அதற்குக் கடந்த ஆண்டு (1958-'59) மட்டும் செலவாகியிருப்பது எவ்வளவு தெரியுமா?

9 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய்கள்!

வெள்ளையன் பாதுகாப்புச்செலவுக்குச் செலவழித்ததைக்கூடக் கண்டித்தனர்; முழங்கிக் கிழித்தனர். நன்றாக நினைவிருக்கிறது; பம்பாயில் நடந்த முதல் காங்கிரசிலேயே—தம்மை அரசியல் அரங்கில் அறிமுகப்படுத்திக்கொண்ட அன்றே, காங்கிரசார் சுட்டிக்காட்டத் தொடங்கினர் ஆங்கிலேயரின் செலவினங்களை. "விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு உள்ள பாரதத்தில் சுரண்டும் வரிப் பணத்தைக் கொட்டித் தொலைக்கின்றனர், படைகளுக்கு! அதுவும் ஆண்டுக்கு ஆண்டு உயர்கிறது! 1857-ம் ஆண்டு படைச் செலவு 1,14,63,000 பவுன்கள். கடந்த 1884-ம் ஆண்டும் படைச்செலவு 1,69,75,750 பவுன்கள். பார்த்தீர்களா! **படையில் வெள்ளையர் பலருக்குப் பதவி தந்து அவர்களுக்கு நம் சொத்தை அள்ளித் தருகின்றனர்! நடக்கலாமா இக்கொடுமை!**

செலவு இப்படி உயரலாமா? சில வெள்ளையர் வாழ்வதற்காகப் படையமைப்பு பெருக வேண்டுமா? சுதேசிப் படை அமைப்பதன் மூலமும், சுதேசிகளிடமே பொறுப்பான பதவிகளைத் தருதலின் மூலமும், செலவைக் குறைக்கலாமே!" என்று இப்படியும் பேசிக் கணைகளைத் தொடுத்தார், சென்னையிலிருந்து சென்றிருந்த பிரதிநிதி திரு. பி. அரங்கைய நாயுடு அவர்கள்.

சுதந்தரம் வந்த பின்னே படைச் செலவு ஒன்று இரண்டு என்பது மாறி நூறு கோடிகள், இருநூறு கோடிகள் என உயர்ந்து எழுநூறு கோடிவரை வளர்ந்து இப்போது ஐநூறு கோடிக்குத் தாழ்ந்திருப்பதாகக் காணப்படுகிறது! எனினும், விடுதலை பெற்றதாய் பன்னிரண்டு ஆண்டுகள் கழித்தும் இன்னும் பல வெள்ளையர் படையின் முக்கியப் பொறுப்புக்களிலே இருக்கத்தான் செய்கின்றனர். அவர்கள் அகற்றப்படவுமில்லை; படைச் செலவு குறைக்கப்படவுமில்லை! சத்தியகீர்த்தி வாரிசினரின் மற்றொரு சாதனை இது; கவர்னர் பதவி ஆதிக்கத்தின் சின்னமாதலால் அழிக்கப்பட வேண்டுமென்ற அவர்கள் அப்பதவியைத்தான் ஆட்சிக்கு அரணாக வைத்திருக்கின்றனர். படையில் இருந்த பரங்கியர் நமக்கு எப்படிப் பகைவரோ, அதேபோன்று பதவியில் இருக்கும் கவர்னரும் பகைவரே! கவர்னரின் செலவு சல்லியாகிலும் குறைவதற்குப் பதிலாக இலட்சக் கணக்கில்கூடத்தான் செய்திருக்கிறது!

இவை எல்லாம் கண்டிக்கப்பட வேண்டும் சட்டமன்றப் பிரதிநிதிகளில் ஓர் காங்கிரஸ் உறுப்பினராகிலும் எழுந்து இச்செலவைக் கண்டித்ததுண்டா? ஒன்று எழுந்தது! '**சட்டமன்ற உறுப்பினர்களின் சம்பளம் போதவில்லை; பஞ்சப்படியும் கொஞ்சம்தான்.** உடன் அரசினர் உயர்த்துக; உயர்த்துக; எம் சம்பளத்தையும் பஞ்சப்படியையும்!" என்றுதான் அது பேசிற்று.

கருவூல அறைக்குள்ளே, கள்ளனையும் காலாடியையும் விடுதல் எவ்வளவு தப்போ அவ்வளவு தப்பு,

சட்டமன்றில் சாமியாரை விடுதல் என்பதைத்தான் இது உறுதிப்படுத்துக்கின்றது

கள்ளன் கருவூலத்தைக் கொள்ளையடிப்பான்; பரதேசி சட்டமன்றையும் நடுத் தெருவாக நினைக்கலாம்.

ஆனால் காங்கிரசின் மொத்த உருவும் இந்த விவாதங்களால் தெளிவாய்த் தெரிகின்றது. அன்னார் முழு உணர்ச்சியையும் நன்கு அறிகின்றோம். பணமும், பணம் பெறுவதற்குப் பதவியுமே தேடுகின்ற வேட்டைக்காரர்கள் கூட்டம்தான் காங்கிரஸ். அது எந்நாளும் என்றைக்கும் எங்கும் முதலைக் கண்ணீரை முதலாய் வைத்துத்தான் தன் வாழ்வை நடத்தும்! ★

சென்னைப் பல்கலைக் கழகத்தினர் உருவாக்கும் தமிழ்ப் பேரகராதி ஒன்றின் ஆசிரியர் குழு ஒன்று 16-3-59 அன்று பதவி ஏற்றது.

இவ்வகராதியின் தலைமை ஆசிரியராக டாக்டர் திரு. அ. சிதம்பரநாதனார் எம். ஏ., பிஎச். டி. அவர்களும், துணை ஆசிரியராகப் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் எம். ஏ, எல். டி. அவர்களும் பதவி ஏற்றுள்ளனர்.

வல்லை திரு. பாலசுப்பிரமணியம் பி. ஏ, அவர்களும் ஆசிரியர் குழுவில் பணியாற்றுகிறார்.

அவர்களின் தமிழ்த்தொண்டு வெல்லவும் வளரவும் வாழ்த்துகிறோம்.

சிவகெங்கைச் சீமை

காட்சிகள்

★

பாளையங்கோட்டை சிறைச் சாலையில் ஊமைத்துரை விடுதலைக்கு முயல்கிறார்.

★

தளபதி முத்தழகுவைக் கைது செய்யும்படி, மருதரசர் உத்தரவு. உயிருக்குயிரான தளபதி கைது ஆகவேண்டிய அவசியம் என்ன? அண்ணன் செய்த துரோகமா? அண்ணி கண்ணுத்தாள் திகைக்கிருள்..



கதையைப்பற்றிய சிந்தனை.

திருப்பத்தூர்ச் சிறைச்சாலையில் பெரிய ராணி ராக்காத்தாள்.

★

"இமையும் விழியும் பகையானல் இயற்கை சிரிக்காதோ? அண்ணனும் தம்பியும் எதிரிகளாவதா?"- கணவனின் கால்களைப் பிடித்துக் கதறுகிருள் கண்ணுத்தாள்.

"சிவகெங்கைச் சீமை"

- கருத்துரைகள் -

வீரையா வகுப்பான் விடுதலைப்பாதை.

பாளையங்கோட்டைச் சிறையில் ஊமைத்துரையும் ஒரு முதியவரும் இருக்கின்றனர். அண்ணன் இறந்த பிறகு கும்பினியாரின் சிறையில் நலியும் ஊமைத்துரையும், அவன்பால் அனுதாபம்கொண்ட ஒரு முதியவரும் உரையாடும் காட்சி, இது.

முதியவர் : பலநாட்கள் ஆகிவிட்டன, பொம்மு நாயக்கர் கொல்லப்பட்டு, பாஞ்சாலங்குறிச்சி மக்கள் அனுதைகளாகிவிட்டார்கள். தம்பி ஊமைத்துரை... என்னைப் போன்ற சாதாரண மனிதர்கள் சிறையிலே மடிந்துவிட்டாலும் கவலையில்லை. எப்படியாவது விடுதலை பெறவேண்டும் நீ. ஏங்கி நிற்கும் பாஞ்சாலங்குறிச்சியைத் தாங்கிப் பிடிக்கவேண்டும்.

ஊமைத்துரை : அதற்குத்தான் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறேன். நன்றியுள்ள சிறைக்காவலர்கள்மூலம் வீரையாவுக்கு ஓலை அனுப்பியிருக்கிறேன். மருதுபாண்டியருக்கு நெருங்கிய உறவினன் வீரையா சிறை உடைப்பதற்கு அவர்களிடம் உதவி கேட்டு, அவனையே அனுப்பியிருக்கிறேன். இந்நேரம் அவன் சிவகெங்கையில் உதவி கேட்டுக் கொண்டிருப்பான். மருதுபாண்டியர்களும் மறுக்கமாட்டார்கள்.

கொற்றவனைக் கொல்ல முயன்றவன்...?

நள்ளிரவில் தம் வீட்டுக் கதவு தட்டப்பட்டதும், மருதரசரின் தளபதி முத்தழகு திறக்கிருன்; திகைக்கிருன்! எதிரே நின்ற கறுத்தான் உள்ளே வந்துகொண்டே கூறுகிருன்.

கறுத்தான் : உங்கள் அண்ணனையும் உங்களையும் கைது செய்யும்படி மருதரசர் உத்தரவு.

கண்ணுத்தாள் திகைக்கிருள்.

முத்தழகு : அண்ணனையும் என்னையுமா...எதற்காக?

கறுத்தான் : உங்கள் அண்ணன் பெரியமன்னரைக் கொல்ல முயன்ருர். இந்தச் சதியில் உங்களுக்கும் பங்கு இருப்பதாக மருதரசர்கள் சந்தேகிக்கிருர்கள்.

முத்தழகு : என் அண்ணன் கொல்ல முயன்ருர்? சதியில் எனக்குப் பங்கா...?

கண்ணுத்தாள் ஏதும் செய்ய இயலாது நிற்கிருள்.

முத்தழகு : அண்ணி, எல்லாம் முடிந்துவிட்டது. போய் வருகிறேன்...போய் வருகிறேன்.

முத்தழகு வீரர்களுடன் போகிருன். கண்ணுத்தாள் மயங்கி விழ்கிருள். மன்னரைக் கொல்லும் முயற்சியில் தோற்ருேடி வந்து இதுவரை காவலர்களுக்குத் தெரியாமல் ஒளிந்திருந்த துரோகி சின்னச்சாமி மயக்கம் தெளிந்த மனைவியிடம் சொல்கிருன்.

சின்னச்சாமி : அழாதே, கண்ணுத்தாள். அழாதே! அரசியல்வாதியின் மனைவி கணவனைத் தவிர பிள்ளையிடத்தில்கூடப் பிரியம் வைக்கக்கூடாது. நாங்கள் நாடகமாடிக் கொண்டிருப்பது, வேடிக்கையான உலகம். தந்தையை மகன் எதிர்ப்பதும், தம்பியை அண்ணன் வதைப்பதும், சாதாரணம்...

காரியத்திற்காகப் பகைவரின் காலைப் பிடித்து நண்பராக்குவோம். காரியம் முடிந்ததும் காலால் உதைத்து, நண்பர்களைப் பகைவர்களாக்குவோம்.

பகைவர்கள் நண்பர்களா? நண்பர்கள் பகைவர்களா?

பெரியமருது : நண்பர்களை எல்லாம் பகைவர்களாகச் சந்திக்க வேண்டிய காலம் வருமென்று நான் கனவிலும் கருதியதில்லை.

சின்னமருது : நண்பர்கள் பகைவர்களாகவில்லை, அண்ணு! பகைவர்கள் நண்பர்களைப் போல நடித்திருக்கிருர்கள்!

காட்சி இருக்க சாட்சி எதற்கு?

முத்தழகு குற்றவாளிக் கோலத்தில மருதரசர்கள்முன் நிற்க...

சின்னமருது : முத்தழகு! இன்னுமா உன்னை நம்பச் சொல்கிருய்?

முத்தழகு : நம்ப வைப்பதற்கு என்னிடம் சாட்சிகள் இல்லை!

சின்னமருது : காட்சி உன்னைக் குற்றவாளி என்கிறது. சாட்சி எதற்கு முத்தழகு? கொல்ல வந்தவன் உன் அண்ணன்! கொண்டுவந்து சேர்த்தவன் நீ! குற்றவாளி யாரென்று கண்டு பிடிப்பதற்கு விசாரணைகூடத் தேவையில்லை! இந்தத் திட்டத்தைப் போட்டவனே நீதான் என்கிறேன்!

முத்தழகு : (திடுக்கிட்டு) அரசே!

★

சின்னமருது : கள்ளன் நீ! கயவன் நீ! காட்டிக் கொடுக்கும் துரோகி நீ!

முத்தழகு : ஐயோ, அரசே! கத்தியாலே வெட்டிவிடுங்கள். வார்த்தையாலே கொல்லாதீர்கள்! என் உடம்பிலே ஓடும் குருதியின் ஒவ்வொரு துளியும் என் தாயகத்தையே நேசிக்கிறது!

துடித்தெழும் கைகளும் தினவு கொண்ட தோள்களும் என் தலைவர்களைக் காப்பாற்றவே இதுவரை பயன்பட்டிருக்கின்றன. கயவரைக் கருவறுக்கும் என் நெஞ்சம் உங்கள் கருணையை அழிக்குமா? களிற்றின்மேல் பாயும் என் கைவேல், உங்கள் கனிந்த மார்பின் மேல் பாயுமா? வெள்ளைத் தலைகளை வெட்டி வீழ்த்தத் துள்ளி எழும் என் வீர உணர்ச்சி, உள்ளத்தால், வாக்கால், உயர்ந்த உங்களைச் சாய்க்க முயலுமா? அரசே! நான் நிரபராதி என்று ஒருமுறை கூறிவிட்டு, உங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள்.

தனித்து வீழும் தலை உங்கள் தாள்களிலே விழட்டும்! பெருகி ஓடும் என் குருதி வெள்ளம், என் நன்றி மறவாத் தன்மையைப் பாடட்டும்!

அரசே! பகைவரின் வில்லுக்கும் வேலுக்கும் அஞ்சாத நான் துரோகி என்ற ஒரு சொல்லுக்கு அஞ்சுகிறேன்.

நிதி அமைச்சர்களின் சிந்தனைக்கு!

இந்திய அரசினரின் வரவு செலவுத் திட்டத்தில் 82 கோடி ரூபாய்களுக்குத் துண்டு விழுகிறது. அதில் 20 கோடி ரூபாய்களுக்குத்தான் வரி விதிக்கப்பட்டுள்ளது. துண்டு விழும் தொகையான 62 கோடி ரூபாய்களுக்குப் புதிய வரிகள் போடப்படவில்லை.

சென்னை அரசினரின் வரவு செலவுத் திட்டத்தில் 1.39 கோடி ரூபாய் உபரியாகக் கிடைத்துள்ளது. புதிய வரிகள் போடப்படவில்லை.

மைசூர் அரசினரின் வரவுசெலவுத் திட்டத்தில் 48.40 இலட்சம் ரூபாய் உபரியாகக் கிடைத்துள்ளது. புதிய வரிகள் இல்லை.

இராஜஸ்தான் அரசினரின் வரவு செலவுத் திட்டத்தில் 13.00 இலட்சம் உபரியாகக் கிடைத்துள்ளது. சில புதிய வரிகள் போடப்பட்டுள்ளன.

கேரளா அரசினரின் திட்டத்தில் 77.77 இலட்சம் ரூபாய் துண்டு விழுந்தாலும் புதிய வரிகள் ஒன்றும் போடப்படவில்லை.

அஸ்ஸாம் அரசினரின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 74.00 இலட்சம் உபரியாகக் கிடைத்துள்ளது. புதிய வரிகள் போடப்படவில்லை.

சென்னை நகராண்மைக் கழகத்தின் வரவு செலவுத் திட்டத்தில் 12 இலட்சம் ரூபாய் துண்டு விழுந்தாலும், அவர்கள்கூடப் புதிய வரிகள் விதிக்கவில்லை.

இப்படியாகத்தானே, இந்தியா என்றழைக்கப்படும் நமது பாரத வர்ஷத்தில் பல மாநில அரசினரும் புதிய வரிகள் போடாமல், பொது மக்களைக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றி வருகிறார்கள்.

இப்படித்தான் சொல்லத் தோன்றும், பல மாநிலங்களின் வரவு செலவுத் திட்டத்தையும், மத்திய அரசினரின் வரவு செலவுத் திட்டத்தையும் பார்க்கும் பொதுமக்களுக்கு. ஆனால் பொருளாதாரக் கண் கொண்டு பார்க்கும் சிலருக்கு இதன் உட் பொருள் விளங்கும். வேறு விதத்தில் வரி விதிப்பிற்கு ஓர் எல்லை உண்டு; அந்த எல்லையை எல்லா மாநில அரசினர்களும் தாண்டிவிட்டார்கள்; இனி மக்கள் எந்த ஒரு வரியையும் தாங்கமாட்டார்கள். 1947-ல் ஆரம்பித்து 1959 வரை பல வரிகளையும் போட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்துவிட்டார்கள். இனி வேறு எந்த ஒரு வரியையும் பொது மக்கள் மீது திணிக்க முடியாது. ஆகவே எல்லா ராஜ்ய சர்க்கார்களும் உபரி வரவு செலவுத் திட்டங்களை வெளியிட்டிருக்கிறார்கள்; வெளியிட நேர்ந்திருக்கிறது.

இந்திய வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் லால்சந்த் ஹிராசந்த், மத்திய சர்க்கார் வரவு செலவுத்திட்டம் வெளியானதும்கூறிய சொற்கள் நினைவுக்கு வருகின்றன. "நமது தேசம் வரி விதிப்பின் எல்லையைத் தாண்டி விட்டது" என்கிறார் அவர். ஆகவே இனி, நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கோ, திட்டங்களைத் தீட்டுவதற்கோ, புதிய வரிகள் போட முடியாது; போட்டாலும் வசூலிப்பது கடினமே. எனவே திட்டங்களுக்குத் தேவையான பொருளைத் தேட வேறு துறைகளில் முயலவேண்டும். வரி விதிப்பில் வசூலாகும் தொகை, திட்டங்களுக்கான கோடிக்கணக்கான தொகையில் ஒரு சிறு பகுதியாகக்கூட இருக்காது. ஆகவே மேலும் பல புதிய வரிகள் போடவும் வேண்டாம். மக்களைக் கசக்கிப் பிழியவும் வேண்டாம்.

மேலும் வரவு செலவுத் திட்டத்தில் பல துறைகளில் சிக்கனத்தை மேற்கொண்டால், ஒரு குறிப்பிட்ட தொகையை மிச்சப்படுத்த முடியும் என்று பலரும் கருதுகின்றனர். உதாரணமாக இராணுவச் செலவு நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பெரும்பங்கை இராணுவச் செலவு விழுங்கிக்கொண்டு வருகிறது. இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும், குறைக்க வேண்டும் என்று பலப்பல அறிஞர்கள் பாராளுமன்றத்திலும், வேறு இடங்களிலும், பன்முறைகள் கூறிய பிறகு, இந்த ஆண்டில் ஏதோ ஒரு சிறு தொகை இராணுவச் செலவில் குறைத்திருக்கிறார்கள். மேலும் இராணுவச் செலவில் பெரும்பகுதியைக் குறைக்க இடமுண்டு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

'சிவில்' செலவுகளும் பன்மடங்கு உயர்ந்திருக்கின்றன. 1955 - 56 முதல் 1959-60 வரையில் 'சிவில்' செலவுகள் 278 கோடி ரூபாய் உயர்ந்துள்ளன. திட்டம் சம்பந்தப்பட்ட அளவில், கல்வி, சுகாதாரம், விவசாயம் முதலியவைகளுக்காக இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளது என்றாலும், பொதுவாகப் பார்க்கும் இடத்தில், செலவுகள் பன்மடங்கு பெருகியுள்ளன. ஆட்சிச் செலவு எல்லைமீறி அதிகரித்துள்ளது. வரிவசூல் செய்வதற்காக மட்டும் 8 கோடி ரூபாய் செலவாகிறது என்றால், அந்த இலாகாவில் எத்தனை அதிகாரிகள், துணை அதிகாரிகள், உதவியாளர்கள் இருப்பார்கள் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். இதே போல்தான் ஒவ்வொரு இலாகாவிலும் அதிகப்படியான அதிகாரிகள் இருக்கிறார்கள். டில்லியில் இருக்கும் அரசினர். மாநில அரசுகளுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள, இவர்கள் அவர்களுக்கு எழுத, அவர்கள் இவர்களுக்குப் பதில் எழுத, இப்படியாக அநாவசியமான கடிதப் போக்குவரத்து நடக்கிறது. இதனால் 'பைல்கள்' தாமதமடைகின்றன; பொதுமக்களும் தாமதத்தினால் துன்பமடைய நேரிடுகிறது. இத்தனை பெரும் பெரும் அதிகாரிகள் இருந்தும், ஒரு சிறிய விஷயம்கூட சீக்கிரத்தில் செய்துமுடிக்க முடியாத நிலையில் இன்று ஆட்சி நடக்கிறது. ஆட்சிமுறையில் பல நல்ல சீர்திருத்தங்கள் செய்து, தாமதம் ஆவதைக் குறைக்கலாம்; இதற்காகப் பல அதிகாரிகள் எல்லா பைல்களையும் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்த்து, குறிப்பிட்ட சில முக்கியமான பைல்களை மட்டுமே பார்த்தால் போதும் என்பது போன்ற பல சீர்திருத்தங்களைச் செய்யலாம்.

மேலும் அரசாங்கத்தார் எடுத்து நடத்தும் தொழில்களிலும், கட்டுகின்ற கட்டடங்களிலும், எந்த விதத்திலும் ஊழல்களோ அதிகப்படியான செலவுகளோ இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; இந்த அளவில் சில கோடி ரூபாய்களை மீதி வைக்க இடமுண்டு. அண்மையில் துவக்கப்பட்ட ஓர் அரசாங்க இரும்பு ஆலையின் செலவில் ஒரு பெரும் தொகையைத் தவிர்த்திருக்கக்கூடும் என்ற செய்தி வெளியானது அல்லவா? இதைப்போன்ற ஊழல்களைத் தவிர்க்க வேண்டும்.

மாநிலங்களுக்கு மத்ய அரசினர் தரும் மான்யங்களை அந்தந்த மாநிலங்கள் சரிவரச் செலவு செய்கின்றனரா, ஊழல்கள் இல்லாமல் இருக்கின்றனவா, என்பதை அவ்வப்போது மத்ய அரசினர் மேற்பார்வை பார்க்க வேண்டும். தணிக்கை அளவில் மட்டும் இருக்கும் இந்நிலை மாறி வரும்போது மாநிலங்களின் உரிமையைப் பறிப்பதாக இருக்கக்கூடாது.

மத்யசர்க்காரின் வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் சிக்கனத்தை மேற்கொண்டால், பல கோடிக் கணக்கான ரூபாய்களை மீதப்படுத்தலாம். தூதுவர்களுக்குக் கொட்டிக் கொடுக்கப்படும் தொகையில் பெரும் பங்கைக் குறைக்கலாம்; ஆங்காங்கு தூதர்கள் இருக்கவேண்டியது அவசியம்தான். ஆனால் அவர்கள் வீண்செலவும், ஆடம்பரச் செலவுகளும் செய்வது அவசியமில்லை. மத்ய அரசினரின் சிக்கனத்தில் கிடைக்கும் தொகையைக் கொண்டு பல மாநிலங்களுக்குப் பல திட்டங்களை நிறைவேற்ற வசதிகள் செய்து தரலாம்.

மேலும் வரி போடமுடியாத நிலைமையில் இருக்கும் அரசாங்கங்கள் உபரி பட்ஜெட்டுகள் வெளியிட்டன. மேலும் புதிய வரிகள் போடமுடியாது. ஆகவே எங்கும் சிக்கனத்தைக் கையாள்வதன்மூலம், ஒரு பெரும் தொகையை மீதப்படுத்தலாம். திட்டத்திற்காகத்தேவைப்படும்நிதியைத் திரட்டப் புதிய வரிகள் போடுவது உசிதமல்ல; போடப்படும் வரிகளின் மூலம் வசூலாக வேண்டிய தொகையை வசூலித்தாலே போதும். மாநிலங்களுக்கே திருப்பிக்கொடுத்துவிடுவதன்மூலம், அவை முன்னேற்றமடைய வகை செய்யலாம். மேலும், அதனால் மாநிலங்களின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையலாம்; அவைகள் விற்பனை வரியிலிருந்து அவசியமான பொருள்களுக்கு விலக்கு தரக்கூடும்; ஒரே முகமான விற்பனைவரி விதிக்கக்கூடும்; இன்னும் சொல்லப்போனால், அவர்களுடைய பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்த பிறகு, ஏற்கெனவே விதிக்கப்பட்டுள்ள சில வரிகளையும் நீக்கிவிடலாம்!

வரி விதிப்பிற்கு ஓர் எல்லை உண்டு; அந்த எல்லையைக் கடந்துவிட்டனர் பல மாநில அரசினர்கள். ஆகவே மேலும் புதிய வரிகளை விதிக்கமுடியாத நிலைமையில், தங்கள் வரவு செலவுத் திட்டங்களைத் தீட்டவேண்டியிருக்கிறது. அதற்கு மத்ய அரசினரும் மேற்கூறிய வகைகளில் துணை புரிய வேண்டும். மேலும் புதிய வரிகளைப் போடுவது இல்லை என்பது இனி, கொள்கையாக இருக்கக் கூடாது; போடப்பட்ட வரிகள் சரிவர வசூலாகின்றனவா என்பதும், எந்த அளவிற்குப் பொதுமக்களைப் பாதிக்கும் விற்பனைவரி போன்ற வரிகளை ஒழிக்கலாம் என்பதுமே கொள்கைகளாக இருக்கவேண்டும் சிக்கனத்தை மேற்கொள்ளுதல்மூலமும், ஆட்சிச்செலவுகளைக் குறைப்பதன் மூலமும், இராணுவச் செலவைக் குறைப்பதன் மூலமும், மத்ய அரசினர் பெரும்பகுதி நிதியை மீத்தி மாநில அரசுகளுக்கு உதவலாம்; உதவ வேண்டும். புதிய வரிகள் போட முடியாத நிலைமையில், புதிய திட்டம் உருவாகும் வேளையில், ஏராளமான நிதி தேவைப்படும் நேரத்தில் அரசினர் போடப்படும் வரிகளை ஒழுங்காக வசூலித்து, நல்ல முறையில் செலவழித்தால், பொருளாதாரம் வளர்ச்சியுறும்; விஞ்ஞான ரீதியான வரிகளை மட்டும் விதித்து, மற்ற வரிகளைஒழித்து, மக்களுக்கு பத்தாண்டுகளாக இருந்துவரும் வரிப் பளுவைக் குறைக்கக்கூடும். செய்வார்களா?

-நா. ஜகந்நாதன் எம். ஏ.

அவள் யார்?

சீருண்டெழும் அலைப் புரவிகள். ஒன்றின்மேல் ஒன்றாய் மோதி உடைந்தன. ஆண்டைமார்களின் ஏவல்படி அடிமைக் கூட்டம் இருபுறமும் கொதித்தெழுந்து மோதிக் குத்திக்கொண்டு செத்துவிழுவதைத் தான், அவை நினைவூட்டின. அவற்றைக் குத்திக் கிளப்பிவிட்ட காற்று தன் போக்கில் ஊளையிட்டுக் கொண்டு சென்றது. இப்படித்தானே, ஆங்கிலேய அரசனும் பிரெஞ்சு சர்வாதிகாரியும் தம் படைகளைத் தூண்டிவிடுகின்றனர். அவர்களின் ஆதிக்க விளையாட்டுக்குப் பலியாகி, இப்படித்தானே மோதி மடிகின்றனர் இருதரப்பு வீரர்களும். அவர்கள் வடித்த செங்குருதிதான் இக்கடலானதா? இல்லை; இல்லை! இது நீல நிறத்திலல்லவா இருக்கிறது. படைஞரைப் பிரிந்த மனைவி மக்களின் கண்ணீரோ இக்கடல்? கடல் நீரில் கொதிப்பில்லையே! வெம்மையில்லையே!

அவன் முகத்தில் நீர்த்துளிகள் பட்டுப்பட்டாய்த் தெறித்தன. அண்ணாந்து பார்த்தான். அங்கேயும் சில பனித்துளிகள் உயிருக்கு மன்றாடித் திண்டாடின. மேகக் கூட்டத்தினிடமிருந்து தப்பிக்க முயன்றன. விண்மீன்கள் போராடின.

ஆயிற்று. இன்னும் சிறிது பொழுது சென்றால் அவன் விடுதலைக் காற்றை மூச்சுத் தடுமாற இழுத்துவிடுவான். கதிரவன் தலைகாட்டுவதற்கு முன் அவன் கால்கள் கரையைத் தொட்டு விட்டால்...

உள்ளம் கற்பனைக் கனவுகளிலே மிதந்தது. படகு அலைகளிடை மிதந்தது. மனதிற்கு இருக்கும் விரைவு படகுக்கில்லையே: அவன் செலுத்தும் துடுப்பில்லாத படகுபோல் அமைதி இல்லாத உள்ளம்; சஞ்சல நெஞ்சம்.

கூதல், சட்டையில்லாத உடலைத் துளைத்தது. "என்பு தோல் போர்த்த உடம்பு" ஆடியது. கன்னத்தில் கை வைத்தான். காடாய் வளர்ந்து முள்ளாய்க் குத்தியது; தறி கெட்டு வளர்ந்து நிற்கிறது மயிர். இன்னும் சில மணிகளில் இத்தொல்லை எல்லாம் அழிந்துவிடும். தாயகமாம் இங்கிலாந்தினை மிதித்துவிட்டால், துயரெல்லாம் தூள்! தூள்!

படகு ஏன் நின்றுவிட்டது? இல்லை! இல்லை! அவன்தான் மாட்டிக்கொண்டான். அவனைச் சுற்றிலும் கழுகுக் கண்களும் கொடிய துப்பாக்கிகளும் கொண்ட பிரெஞ்சு மறவர்கள். அவனைச் சூழ்ந்து பிரெஞ்சுப் படகுகள்...

"அய்யோ! என் ஆசைக்கும் கடலலைகளின் முடிவுதானா? கரையில் சிறுபிள்ளைகள் கட்டிய மணல் வீடுதானா, என் ஆசை?"

உள்ளம் ஓலமிட்டது.

படகு திருப்பப்பட்டது. இப்போது அவன் பிரெஞ்சுப் படையின் கைதி.

"துப்பறியவா வந்தாய்? தப்பி ஓடப்பார்த்தாயா? யார் நீ? இருள் உலவும் வேளையில் இங்கே சுற்றி அலைய நீ யார்? துடுப்பற்ற படகு! பாய்மரமில்லாப் பயணம்! துடுக்கான போக்கு, வலுவற்ற இந்த உடலுக்குள்! யார் நீ? எங்கே செல்கிறாய்?"

பிரெஞ்சுப் படையினர் வாய் இப்படிக் கேட்கவில்லை. கைகளும் கழிகளும் தாம் கேட்டன. "நமது தலைவன் நெப்போலியனிடம் கொண்டு போனால் நம் கடமையும் தீர்ந்துவிடும்; இவன் வாழ்வும் முடிந்துவிடும்!" என்று சிலர் கூற எல்லோரும் அவனை நெப்போலியன் இருக்கும் இடம் நோக்கி அழைத்துச் சென்றனர்.

"நெப்போலியனிடமா? தன் படை வீரர்களைக்கூடச் சுட்டுப் பொசுக்கும் ஈனை-இரக்கமற்ற வனாயிற்றே! எடுத்துக்கொண்ட முயற்சிகள் அத்தனையும், என்னை மறுபடியும் இன்னல் கடலிலேயே தள்ளி விட்டனவே!"

கொடுங் கனவைக் கண்டதும் வீறிட்டழும் குழந்தைபோல், அவன் உள்ளம் கத்தியது. சற்று நேரத்தில் டோவரின் கரையை மிதித்துவிடலாம் என்றெண்ணியவன் சாவின் வாயிலை மிதித்துவிட்டானே! சபலக் கனவுகள் பொங்கிய கண்களிலே அவலக் கண்ணீர் பொங்கிற்று. இதற்குத்தானா இத்தனை இரவுகள் அவன் விழித்தான்...

தலை கவிழ்ந்தான். அலைகள்கூட அவனைப் பார்த்துச் சிரித்தன. அண்ணாந்தான். வெள்ளைச் சிறகுகளை அடித்துக்கொண்டு பறவைக் கூட்டம் சென்றது.

உணர்ச்சியற்ற, பாசமற்ற, உறவற்ற, பகுத்தறிவற்ற பறவைகள் கூடத் தம் போக்கில் செல்கின்றன. தடுப்பார் எவருமில்லை. அவை காலந்தோறும் தவறாது இங்கிலாந்து செல்கின்றன; வருகின்றன. கூட்டம் கூட்டமாய்ச் செல்கின்றன. ஆனால், தனி ஒரு மனிதன்...பாசமுள்ளவன்; பகுத்தறிவுள்ளவன்; உணர்ச்சி உள்ளவன்; உறவு நாடுபவன்—அவனுக்கு நினைத்த இடம் செல்ல அனுமதியில்லை. மனிதப் பிறவிக்குத்தான் எவ்வளவு விடுதலை; என்ன பெருமை!

பறவைகளின் விடுதலை வாழ்வு அவன் விழிகளைக் குத்தின; தலை குனிந்தான். கண்களை மூடிக்கொண்டான். அவன் முயற்சிகள் அத்தனையும் மூடிய கண்ணுக்கு முன் கூத்தாடின; கேலி செய்தன...

அவன் ஒரு மாலுமி; பிரித்தானியன். கடற்போரில் சிதறுண்ட அவன் பக்கத்திலிருந்து ஒரு சிறு தீவுக்குத் தப்பிச் சென்றான். உயிர் பிழைந்தான். கண்டதை உண்டு, கிடைத்ததைக் குடித்துக் காட்டுமிராண்டி போல் வாழ்ந்தான். பிரெஞ்சுப் பகுதியைச் சேர்ந்த அத்தீவில் எவரின் நடமாட்டமும் இல்லை. ஆனாலும் பகல் முழுதும் ஒரு குகைக்குள்ளேயே இருந்தான். இரவில் மட்டும் கரைக்கு வருவான். இருளினூடே ஏதேனும் கலங்கள் வருகின்றனவா என அவன் விழிதேடும். ஆர்வமும் ஆசையும், தாயகத்தைக் காண வேண்டும் என்ற துடிப்பும் அவன் தூக்கத்திற்குத் தடை உத்தரவு போட்டன. அப்படித் தாயகம் சென்று எதைத்தான் காணப் போகிறானோ?

விழிகள் கடல் வெளியை வேட்டையாடிக்கொண்டிருந்த ஒரு வைகறையில்...எங்கிருந்தோ அடித்து வரப்பட்ட மரம் ஒன்று அங்குமிங்குமாய் அலைந்து கரையை ஒட்டி வந்தது. அவன் தாவி அதைப் பிடித்திழுத்தான்.

"ஏன் இதை இழுக்கிறோம்?" என்றுகூட அவன் நினைத்தான். "பிரித்தானியக் கப்பல் ஏதும் வராதா? என்று ஏங்கித் தவித்த உனக்கு உன் கையே துணையாகிறது..." என்று உள்ளம் சொன்னது. மரத்தை இழுத்துச் சென்று குகைக்குள் தள்ளினான், பொழுது புலர்வதற்குள்.

நாட்கள் உருண்டன. வியர்வை சொட்டிற்று; குருதி வியர்வையாகியது.

கருமமே கண்ணாயிருந்தான். உணவும் ஓய்வும் வேண்டப்படவில்லை. இரவு பகல் தெரியவில்லை. உழைப்பு! உழைப்பு! ஓயாத உழைப்பு! இறுதியில் உழைப்பின் பலன் சிரித்தது. காட்டு மரம் படகானது! ஆனால் அதில் துடுப்பில்லை; பாயில்லை. என்றாலும் அவன் உள்ளத்தில் ஆர்வ-ஆவல், மங்கவில்லை; மறையவில்லை. நெஞ்சம் துவளவில்லை; தளரவில்லை. எப்படியும் இருளோடு இருளாக ஓரிரவு புறப்பட்டுவிட்டால்-காற்றும் துணை செய்துவிட்டால், தொல்லையே இல்லை!

அவன் இனி அவளைக் காணாதிருக்கமுடியாது. தாயகம் சென்று உடன் அவளைக் கண்டு மகிழ வேண்டும். அது ஒன்றே போதும், பட்ட துயர்களுக்கு. அவளைக் கண்டு விட்டால், சாவதற்கு முன் கண்டு விட்டால், இனி எத்தொல்லையும் ஒரு தூசியே!

தன் கை தனக்கு உதவியாய் அமையத் தயாரித்த படகைத் தள்ளினான் நீருக்குள். காற்றும் ஏற்றதாயிருந்தது. இதே போக்கில் வீசினால் விடிவதற்குள் அன்னை மண்ணை மிதித்துவிடுவான்.

"இன்னும் சற்றுநேரத்தில் கரை சேர்ந்து விடலாம்...இன்பத்தை அணைத்திடலாம்..."

எண்ணம் இப்படி மிதக்கையில் தான் சாவின் கைகள் அவனை அணைத்துவிட்டன. காவலுக்காகச் சுற்றிக்கொண்டிருந்த பிரெஞ்சுப் படைகள், அவன் விழியைக் கொத்திவிட்டன; வழியை மறித்து விட்டன.

நெப்போலியன் கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு முன்னும் பின்னும் நடக்கிறான். வரலாற்றில் நெடும் புகழை நிலை நிறுத்திவிட்டுச் சென்ற அந்தக் குள்ள மனிதனின் கால்கள் விரைந்து அலைந்தன. ஆழ்ந்த சிந்தனையிலோ மிகுந்த சினத்திலோ அவன் ஈடுபட்டிருக்கையில் அவன் நடை அப்படித்தான் இருக்கும். சினமா? சிந்தனையா? அவனை இப்போது ஆட்டிப்படைக்கும் உணர்ச்சி எது? தெரியாமல் திண்டாடினான், அவன்.

"யார் இவன்? வந்தது-பிடித்தது எப்படி?"

இடி வெட்டினாற்போல வெடித்தது நெப்போலியன் குரல். இடி வெட்டிற்குத் தொடர்போ-பொருளோ ஏது? ஆனால் இடி இடிப்பதன் விளைவோ...?

நடுங்கிச் செத்தான் இளைஞன். நெப்போலியனின் வினைக் கணைகளுக்குப் பொருள் என்ன? தலை கொய்யப்படுமா? தூக்குக் கயிறு முத்தமிடுமா? சிறைக்கூடத்திலே இளமை பலியாகுமா?

"இந்தப் பிரித்தானியன் ஒரு படகில் நம் காவலையும் தப்பி, இங்கிலாந்து செல்ல முனைந்தான். கைது செய்தோம்!"

குற்றச்சாட்டு முடிக்கப்பட்டது.

நெப்போலியன் நடந்துகொண்டேயிருந்தான், குறுக்கும் நெடுக்குமாக.

"இங்கிலாந்து செல்ல முனைந்தாயா? துடுப்பற்ற படகிலா? துடிப்பேன் அவ்வளவு?"

"என் தாயகத்தில் எனது உயிரானவள்-என் அன்பிற்குரியவள்-மறக்கமுடியாதவள் - பிரியமுடியாதவள் இருக்கிறாள். படை எடுப்பில் பிரிந்த நான் அவளைக் காணத் துடித்தேன். அவளைக் காணும்பொருட்டுத்தான்..."

"துடுப்பு அற்ற படகில் கடலைக் கடக்க முனைந்தாயோ? படகு கவிழ்ந்திருந்தால், பாதி வழியில்?"

"கவலை இல்லை. அவளைக் காணும் முயற்சியில் இறப்பதும், கடலிடை களபலியாவதும் ஒரே வகையான இன்பத்தைத்தான் தரும்!"

"அதிகம் பேசிவிட்டோமோ?" என்ற அச்சம் திடீரெனக் கொத்தவே, அத்துடன் பேச்சை நிறுத்தினான்.

"அவளைக் காண...! அவளைக் காண? எவளைக் காண? சாகுமுன் ஒரு முறையாகிலும் சந்தித்துவிட வேண்டுமோ, அவளை? எவளை? அலைகடலும், கொடும் காற்றும் அச்சமூட்டவில்லையா உனக்கு? அவளை நினைத்ததும் கவலை ஏதுமில்லையா? கடலைக் கண்டு நடுங்கவில்லையா?

"ஆமாம்...அவளை நினைத்ததும்... நினைத்ததும்..."

நெப்போலியன் திடீரென்று நின்று திரும்பவும், அவனின் பேச்சு வெட்டுண்டு நின்றது. நெப்போலியனின் விழிகளில் தெரிவது அழலா? அது என்ன உணர்ச்சி? எந்த நோக்கம்?

அவளைக் காணச் சென்றதற்கு உயிரே தண்டனையாகிடுமா?

"அவளைக் காணச் சென்றாய்! அவளைக் காணக் கடலைக்கடந்தாய்! யார் அவள்? இனிய தோற்றம், எடுப்பான குரல், ஏறு நடை, கொழிக்கும் இளமை ஆகிய இத்தனையும் கொண்ட, ஒருவன் உள்ளத்தைக் கவர்பவள் யாராய் இருக்கமுடியும்? போரை மறந்து, பகைக்கு மறைந்து, தப்பி ஓடி வரச் சொல்வது யாரின் உருவாய் இருக்க முடியும்? இளைய உனது நெஞ்சிலே ஆசைக் கனவுகளை அலைமோதவிடும் அவள் உன்...உன் காதலியாய்த்தான்-மலைமுடியில் நின்று காதல் கானம் இசைக்கும் வானம்பாடியாய்த்தான் இருக்கமுடியும். ஆம்! அவள் உன் காதலியாய்த்தான் இருக்க முடியும்!"

— 10-ம் பக்கம் —

5. எழுசீர் விருத்தம்.

**பொன்னவிர் மேனிப் பெண்மயில் மாலை
போந்ததற் கென்னகா ரணமோ?**

முடிவு தேதி: 4-4-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

— 1 ம் பக்கத் தொடர்ச்சி —

முதன் முறையாக லெனின் புரட்சிக்குப்பின் இந்தக் காலம் வரையிலும் இரும்புத் திரை நாட்டில் நடைபெருத நற்செயலாக, பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்! வெளிநாட்டு வேவுகாரர்களை அல்ல; சொந்த நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் சாதாரண ஒரு குழுக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட செயல் அகில உலகக் காம்ரேட்களுக்கு அரிய செயலாக, அற்புதக் காரியமாகத் தென்பட்டுவிட்டது! இந்த அறிவிப்பின் வாயிலாகத் தங்களின் வேடத்தைத் தாங்களே கலைத்துக்கொண்டதை அவர்களே தாமதமாகத்தான் உணர்ந்துகொண்டார்கள் போலும்! இப்போதுதான் கட்சி சார்புடைய கூட்டங்களுக்கு செய்தியனுப்பும் நிருபர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் என்ருல் இன்றுவரையிலும் முள் வேலிகளுக்கு அப்பாலே நின்று கம்யூனிஸ்ட்கள் சொன்ன செய்திகளைத்தான் ஏடுகள் வெளியிட்டுள்ளன என்ற உண்மையும் சேர்ந்தே வெளி வருகிறது! குருஷ்சேவின் தாராள நோக்கத்தைப் பாரீர் பாரீர் என்று இங்குள்ள மாஸ்கோ நோக்கிகள் பராக்குக் கூறினர்; பதிகம் பாடினர்! இருபத்தொன்ருவது மாநாடு துவங்குவதற்கு முன்னலேயே இந்திய நாட்டு வெற்றி வீரர்கள் வெங்கட்டராமனும் மற்றவர்களும் மாஸ்கோ போய்ச் சேர்ந்தார்கள். சோவியத் நாட்டுப் பொம்மலாட்டக் குழுவினருக்கு ஜனசக்திக்காரர்கள் தருகின்ற வரவேற்புகளுக்கும், புகழ் மொழிகளுக்கும் எண்ணிக்கையில்லை. ஆனுல் அங்கே போன தலைவர்களை அதே போலத் தாளம் தட்டி எவரும் வரவேற்கவில்லை. 'ஆடம்பரமான வரவேற்பு-ஆச்சரியத்தால் திகைத்துப் போனேம்' என்றுகூட இனிமேல் வெங்கட்டராமன்கள் தெரிவிக்கக் கூடும். ஆனுல் அங்கே இவர்கள் காலடிவைத்தபோது செய்தி இல்லை! மாநாட்டு முன்னறிவிப்பில் விசேஷ நிகழ்ச்சியாகக் குறிப்பிட்டது; தவறுகளைஏற்றுக்கொண்டு வருத்தம் தெரிவித்துக்கொண்ட மாஜிப் பிரதமர் புல்கானின் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்வார் என்பதாக இருந்தது. ஆனுல் அதைப்பற்றிப் பேச்சே இல்லை! நடைபெற்றிருந்தால் தவறுகள் செய்துவிட்டு அடிக்கடி மக்கள் மன்றத்திலே மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்குச் சில புதிய பாடங்கள் கிடைத்திருக்கும்!

மாஸ்கோ மாநாட்டில் குருஷ்சேவ் தான் எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் இருந்தனர்! அமெரிக்க விஜயம் செய்துவிட்டு அப்போதுதான் திரும்பிய அனதல் மிக்கோயானும் முக்கியப் பங்கேற்ருர். மாலங்கோவ், புல்கானின், மாலட்டோவ், ஜுகாவ் போன்ற பெருந் தலைவர்கள் இருக்க வேண்டிய இடங்களிலே புதிய முகங்களே இருந்தனவாம்! மாஸ்கோ முதல்வர் தன்னுடைய வீரதீரப் பேச்சிலே முக்கியமாக எடுத்துக்கொண்ட பொருள் இரஷ்யாவின் ஏழாண்டுத் திட்டம்! ஏகாதிபத்திய எதிர்ப்புக் குரல், இரண்டு! மூன்ருவதாகத் திரிபு வாதக் கொள்கையாளரைப்பற்றிய கண்டனம்! நான்காவது- வெளி நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்குத் தாக்கீதுகள்: தங்கள், தங்கள் தாயகங்களிலே மாஸ்கோவின் செய்திகளைத் தவருமல் தரங்கூட்டிக்கூட ஒலி பரப்ப வேண்டியது! பலனுக ஏழாண்டுத் திட்டம் முடியும்போது உலகமே கம்யூனிஸ மயம்! அந்த மாநாட்டிலே எதிர்பாராத விருந்தாளி மாசேதுங் கலந்துகொண்டு உலகத்துக் கம்யூனிஸ்ட்களுக்கெல்லாம் இருந்த பெரும் கவலையையும், ரஷ்யப் பிடியிலேயிருந்து செஞ்சீனம் விலகிவிடுமோ என்ற ஐயப்பாட்டையும் போக்கினர்! ஆனுல் எதிர்பார்க்கப்பட்ட விருந்தாளி எகிப்து நாட்டு நாசர் வர மறுத்துவிட்டது வருந்தத்தக்க செய்தியாகிவிட்டது! நன்றியுரைகளும் பாராட்டுரைகளும் பகன்ற பாரத நாட்டுக் கம்யூனிஸ்ட்கள், 'இந்தியாஎன்றைக்கும் சோவியத் யூனியன் பக்கம் இருக்கும்வகையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இயங்கும். அதனைத் தன் முக்கிய கடமைகளுள் ஒன்ருக்கிக் கொள்ளும்'' என்று தெரிவித்துக்கொண்டார்கள்! அஜய்கோஷ் பேசியதை அருமை பெருமைக்குரிய வெங்கட்டராமன் அவர்கள் தலையாட்டி ஆமோதித்திருப்பார்! சோவியத்தின் சோபிதங்களையெல்லாம் இந்திய நாட்டுக் கலைப் பண்புக் கண்ணேட்டத்துடன் கண்டு களித்துவிட்டு. அஜய்கோஷ் பீகிங் சென்ருர். சங்கரன் முன்னதாகவே வந்து பண்டித நேருவைக் கண்டார். குருஷ்சேவின் நன்றியுரைகளையும் தெரிவித்து அவருடைய புன்னகையைப் பரிசாகப் பெற்றுக்கொண்டார்! மாஸ்கோ சென்ற ஏஜண்டுகளின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பூபேஷ் குப்தா போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களிடம் குருஷ்சேவின் குறும்புப் பேச்சையும், ஏழாண்டுத் திட்ட மகிமையையும் சொல்லி மகிழ்வித்தார்! இவர்கள் மசானியின் தீர்மானம் தள்ளப்பட்டதைச் சொல்லி மகிழ்ந்தார்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மாஸ்கோவைப் பற்றிய எவருடைய மதிப்பீட்டையும் மறுப்பார்கள் மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்! மாலங்கோவ் கொல்லப்பட்டார் என்ற செய்தியைத் 'தென்றல்' எடுத்துக்காட்டியபோது கூவம்நதிப் பேனுக்கள்-தவறிப்போய் ஜனசக்தியார்களிடத்திலே கிடைத்தவைகள்-தீராத நோயென்று சொல்லின! சங்கரன் நம்பூதிரிபாத் மாஸ்கோ போய் பார்த்துவிட்டு வந்து சொல்கிருர் ''அங்கே மாலங்கோவ் இல்லை; நான் பார்க்கவில்லை'' என்று! மாலட்டோவ், புல்கானின், ஷெபிலாவ் போன்ற தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. காணப்படவில்லை என்று! திருவனந்தபுரம் பத்திரிகையாளரிடையே பேசும் போது குருஷ்சேவைக் கண்டு பேசியதைச் சொன்னுர். மாலங்கோவ் பற்றி மழுப்பினுர். சட்ட மன்றத்திலே கணபதி என்ற உறுப்பினர் மாலங்கோவைக் கண்டீரா என்று கேட்ட போது பதில் கூருமல் புன்னகை புரிந்துள்ளார். உலகத்தின் பல பகுதியிலே புகைந்துவரும் செய்தி தன் சட்ட சபைக்குள்ளும் புகுந்துவிட்டதையெண்ணிப் புனுகவும் மறந்துவிட்டார்! ஏகாதிபத்திய எதிர்ப்புக்குரல் கேட்டுவந்த கம்யூனிஸ்ட்கள் தங்களது தானைத் தலைவரென்று போற்றும் குருஷ்சேவின் ஜனநாயக முறை தகர்க்கப்பட்ட செயல்களையும் சொற்களையும் கேட்டுக் கை தட்டிவிட்டுத்தான் வந்துள்ளார்கள்! மாஸ்கோவுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கொள்கைச் செயல் முறைகளில் தொடர்பு இல்லையென்ருல், குடியரசு முறைதவறிக் குண்டு மாரி பொழிந்துவிட்ட காங்கிரஸ் காரர்களையும் தோற்கடித்துவிட்டுக் கம்யூனிஸ்ட்கள் விழாக்கொண்டாடியது ஏன்? நாகபுரி மாநாட்டுக்கு- ஆட்சிபீடத்திற்கு லாயக்கற்ற காங்கிரஸ்காரர்களின் சொல்லடுக்குத் தீர்மானங்களுக்கு - இந்த நாட்டின் எதிர்கால நாயகர்களென நம்பியிருக்கும் கம்யூனிஸ்ட்கள் இருகை நீட்டித் தந்த ஆதரவு ஏன்? மாஸ்கோ சென்று திரும்பியதும் கம்யூனிஸ்ட் மாவீரர்கள் காங்கிரஸ் கட்சிக்கு மலர் தூவி மெத்தை விரிப்பது ஏன்? மாஸ்கோவின் கட்டளையா? பாகிஸ்தான் படையெடுத்துவிடும் என்ற பயமா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் முறைகள் மாஸ்கோவில் தீர்மானிக்கப் படுவதில்லையென்ருல். இந்தத் திடீர் உதவிகள் ஏன்? காங்கிரசை எதிர்க்கிரேம் என்று கங்கணம் கட்டுவது ஏன்? பகலிலே ஜன்னலோரம் நின்று சேதிகளை எதிர்பார்த்துவிட்டு. இரவிலே கதவுகளைத் தாழிட்டுக்கொள்வதும் ஏனே? மாஸ்கோ சென்று திரும்பிய மாவீரர்களே, பதில் கூறுங்கள்!

-கூடலரசன்

★ ★

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

''காதலியல்ல அவள்! பண்புப் பெட்டகமாம்-அன்புச் சோலையாம்-இன்ப ஊற்ரும், அவளைக் கண்டு நெடுநாட்களாகி விட்டன. மறக்க முடியாத உருவம்; நெஞ்சத்து அகற்ற முடியாத பாசப்பேழை, அவள்! ஆனுலும் காதலியல்ல அவள்!''

''காதலியல்ல என்கிருய். எனின், ஆங்கிலக்கால்வாயை-பாய்விரித்துச் செல்லும் கலங்களுக்கும் ஆபத்து வாய் விரித்துக் கிடக்கும் கொடுங் கடலை, கடக்கத் துணிவூட்டிய அந்த அவள் யார்?''

''காதலியல்ல! அலைகடலையும் பகைக்குலத்தையும் துரும்புக்குச் சமம் ஆக்கும் துணிவைத் தந்த அவள், அவள்தான் என் மாதா எனக்கு வீரப்பாலூட்டிய அன்னை! துணிவைப் புகட்டிய தாய்! **ஆமார், அத்த அவள் என் மாதா; என் அன்னை; என் தாய்!''**

''தாயினைக் காண இருளூடே-பகையூடே, கலம் செலுத்தினுய்! இவ்வளவு துணிவும் மறத்திறமும் உடைய மகனைப் பெற்றவள் வீரத்தாயாய்த்தான் இருப்பாள்! மறக்குல மாதா பெற்ற மகன்தான் இத்துணைத் துணிச்சலுடன் செல்லமுடியும்!

தம்பி! நீ என் அன்பைப் பெற்றுவிட்டாய்! தப்பி ஓட முனைந்த பகைப் படையினர் எவரும் பெறமுடியாத ஒன்றை நீ பெற்றுவிட்டாய்!''

இளைருன் கண்ணில்இருசொட்டுக்கள் உதிர்ந்தன. நெப்போலியனின் ஆடாத உள்ளமும் ஆடியது!

''தம்பி! இதோ, என் அன்பின் சின்னங்கள். நெப்போலியன், ஒரு வீர மைந்தனுக்குத் தரும் பரிசுகள். என் அன்பின்-பாராட்டின் முத்திரைகள் பதிந்த தங்கக் கட்டிகள்; காசுகள்; பரிசுகள்! ஏற்றிடுக; எடுத்துக் கொள்க!

யாரங்கே! நமது கலம் ஒன்றில் வெண்கொடி உயரட்டும். அதில் இந்த மாலுமியை ஏற்றிச் சென்று பத்திரமாக இறக்குங்கள், இங்கிலாந்தின் கரையில்!

தம்பி! போ; போய் உயிரினும் இனிய அன்னையைக் கண்டிடுக!''

தாயகம் சேர்ந்த அவன் எண்ணம் ஈடேறியது. ஆனுலும் நெப்போலியன் தந்த பொற் காசுகளைத் துளியும் செலவழிக்கவில்லை; அன்பின் சின்னமாய் வைத்திருந்தான், அப்படியே. மற்ற பரிசுகளும் சிதையாமல் அப்படியே நின்று, பிரெஞ்சு முதலை வாயினின்றும் அவன் மீண்ட கதையைச் சொல்லினவாம்.

கொடியவன்; வெறி பிடித்த விலங்கு; வரலாற்றின் பொன்னேடுகளில் இரத்தச் சேற்றைப் பூசியவன் என்றெல்லாம் சொல்லப்படும் நெப்போலியனின் வாழ்க்கையில் இப்படியும் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. நம்பமுடியாத விந்தையான உண்மை!

—மா. பாண்டியன்

அடுத்த இதழில்-

தென்னரசு

எழுதும்

சிறு கதை

இடம் பெறும்.

ஜயால் பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
ஏஜ: ஏ. சங்குபிள்ளை, 15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

? வினா - விடை

"கூடலரசன்" பதிலளிக்கிறார்

மா. கிருட்டிணன்,
இராசிபாளையம்.

நமது நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் ஏன் சமுதாயச் சீர்திருத்தப் பிரச்சாரம் செய்யவில்லை?

உங்களுக்கு இன்னும் இலக்கியக் கண்ணோட்டம் வரவில்லை, தோழரே! சில நாட்களில் பாருங்கள்—புதுமைப் பெண்ணுக்குக் கடிதம் எழுதும் 'ஜீவா'வின் கருத்துக்களை அகில இந்தியாவும் ஏற்றுக்கொண்டு அவர் பின்னே அணிவகுத்து நிற்கப் போகிறது. இதுவன்றோ சமூக சீர்திருத்தம்? இல்லையா!

★

அ. வேல்சாமி, யாழ்ப்பாணம்.

அமெரிக்காவுக்குப் பொருளாதாரத் திட்டம் வகுத்துத் தந்தது கம்யூனிஸ்ட்களா?

செல்வம் கொழிக்கும் அமெரிக்காவைப்பற்றி உலகத்துக் கம்யூனிஸ்ட்கள் சொல்லாத குற்றச்சாட்டு இது ஒன்றுதான். இன்னும் சிறிதுநாள் கழித்துத்தான், அதாவது ஏழாண்டுத் திட்டம் நிறைவேறிய பிறகுதான் பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்காவைத் தாண்டப் போவதாக மாஸ்கோ கம்யூனிஸ்ட்களே சொல்லிவிட்டார்கள்!

அமெரிக்கா சென்றிருந்த மிக்கோயான் தான் ஒரு நாத்திகன் என்று சொன்னார்—இதற்கு சென்னை 'பிராவ்தா'வும் தமிழகக் கம்யூனிஸ்ட் தலைவர்களும் என்ன சொல்கிருர்கள்?

இப்படிச் சங்கடமான வினுக்களையெல்லாம் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் எதிர்பார்க்கமாட்டார்கள்! விளம்பரம் செய்வதெல்லாம் மார்க்ஸ் லெனின் கோட்பாடுகள்—பேசுவதெல்லாம் கம்பன், நாவுக்கரசர் புலமையும் கிருத்துவ மதத்தின் பெருமையும்! தாங்கள் நாத்திகர்கள் என்று சொல்லிக் கொண்டால், மதவாதிகளை எதிர்க்க வேண்டும். குன்றக்குடி அடிகளாருடனும் இருக்கவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றனர். கம்யூனிசத்திலே கடைந்தெடுக்கப்பட்டவர்களானுலும் மிக்கோயானுடைய துணிவு இவர்களுக்கும் உண்டு என்று நம்புவதற்குச் சரியான ஆதாரம் இல்லை! இடத்தின் இயல்புக்கேற்ப வேடம் போடுவதில் வல்லவர்கள் இத்தலைவர்கள். 'ஜனசக்தி' பத்திரிகையும் தலைவர்கள் வழியேதான் செல்லும்.

★

உதயசூரியன், போத்தனூர்,

குருஷ்சேவுக்கும், ரஸ்புடீனுக்கும் ஒற்றுமை வேற்றுமை என்ன?

கம்யூனிஸ்ட்களின் அரசியல் குருவும்—மதகுருவும்! குருஷ்சேவ் தன்னைச் சூழ்ந்துள்ள சீடர்களை அவ்வப்போது நகைச்சுவை சொல்லி மகிழ்விக்கிருர். அன்றிருந்த ரஸ்புடீனும் மன்னர்களும் மனைவிகளும் சூழ்ந்திருந்த மண்டலங்களில் "மாயா விநோதங்களை"த் தன் அறிவுத்திறத்தினுல் செய்து காட்டியுள்ளான்! குருஷ்சேவ் தன்னை எதிர்த்தவர்களை ஒழித்துக் கட்டத் தவறவில்லை. ரஸ்புடீனும் ஆண்டியாக இருந்துகொண்டே ஆண்ட மன்னர்களைத் தன் வயப்படுத்தி, தனக்கு வந்த எதிர்ப்புகளை முறியடித்தான்! ரஸ்புடீன் ஒரு விஷப்பாம்பு. அவன் இறுதியிலே மக்களால் கொல்லப்பட்டான். குருஷ்சேவ் மாஸ்கோவின் அரசியல் அரங்கத்தில் ஒரு பலிபீடம். எத்தனையோ பேர்களை இரையாக்கிக்கொண்டு வரும் இந்த விசித்திர மனிதனைப்பற்றி ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்கால மாநாடொன்றில் 'வருங்கால குருஷ்சேவ்' ஒருவன் பேசுவான்! எதிர்பார்ப்போம்!

★

ஆர். ஜி. மணி, பம்பாய்-17.

பலாத்காரத்தின் மூலமாகத்தான் கம்யூனிசத்தை அடைய முடியும் என்று லெனின் சொன்னார். ஆனுல் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் ஜனநாயக முறைகளைப்பற்றி பேசுவதின் பொருள் என்ன?

இந்தியக் கம்யூனிஸ்ட்களும் பத்தாண்டுகளுக்கு முன்னுல் பலாத்கார முறைகளைத்தான் கட்சியின் வேலைத் திட்டமாக வைத்திருந்தார்கள். மார்க்சின் மணி மொழிகளை மறந்துவிட்டு ரணதிவேயின் கட்டளையைத் தலைமேல் ஏற்றுக்கொண்டு, தங்களின் 'வீரச் செயல்களை'க் காட்டினுர்கள்! காவல் கைதிகளாக இருப்பவர்கள் எல்லாம் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் தத்துவங்களை எடுத்துப் பேசி விளக்கிய குற்றத்திற்காக தண்டிக்கப்படவில்லை. சதி வழக்குகள், பலாத்கார அடிப்படையில்! இந்திய உபகண்டத்திலே இருப்பவர்கள் கம்யூனிஸ்ட்களைப் பயங்கரமான மனிதர்கள் என்று முடிவு கட்டியதை மாற்றுவதற்காகத்தான் தங்களுக்கும் ஜனநாயகத்தில் நம்பிக்கை உண்டு என்று திரும்பவும் பேச ஆரம்பித்துள்ளார்கள். அரிவாள் சுத்தியில் என்றும் அபாயம் உண்டு!

★

கே. எம். எஸ். மைதீன்,
தாராவி.

ஆங்கிலத்தில் புத்தகம் எழுத நேரமில்லாத அண்ணுத்துரை கம்யூனிஸ்ட் கட்சிக்கு அறிவுரை கூற முனைவது சரியல்ல என்று கேட்கும் மாஜினிக்குத் தங்கள் பதில் என்ன?

ஜனசக்தியின் 'வெறுங் கோயில்' விளக்கம்பற்றி விரிவாகக் கட்டுரையொன்று கம்யூனிஸ்ட்களுக்கும் மாஜினிகளுக்கும் பதில் தருவதாக விரைவில் வெளியிடப்படும். அறிஞர் அண்ணு அவர்கள் கம்யூனிஸ்ட்களைப்பற்றி ஏதாவது பேச வேண்டுமென்று ஜனசக்திக்காரர்கள் எதிர்பார்க்கிருர்கள். எனவேதான் அவரைக் கேலி செய்து எழுதுகிருர்கள்—ஆனுல் அண்ணு அவர்கள் 'மன்னிப்போம் — மறப்போம்' என்கிருர். அவர் அறிஞரல்லவா!

அ. நா. பாண்டியன்,
இராசிபாளையம்.

சென்னை—தொழிற்சங்க மாநாட்டுக்கு டாங்கே வரவில்லையே. ஏன்?

உடல் நிலை சரியில்லை என்று 'ஜனசக்தி' தெரிவித்தது. வந்திருந்தால் உள்ளத்துக்குள்ளே குமுறிக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்கள் ரூ. 5000 பற்றிய சந்தேகத்தைக் கேட்டிருக்கலாம்.

★

அ. நாராயணன்,
இராசிபாளையம்.

மாலங்கோவ் உயிருடன் இருக்கிருரா?

தமிழ்நாட்டுக் கமிட்டி வெங்கட்டராமன் இப்போதுதான் மாஸ்கோவிலிருந்து வந்திருக்கிருர். அவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்!

★

கம்யூனிஸ்ட் பாண்டியன்,
சென்னை-17.

'திராவிடநாடு ஒரு கற்பனை கோஷம்' என்பதை விளக்கிக் கட்டுரை அனுப்பினுல் பிரசுரிப்பீர்களா? இந்தச் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயாரா?

உங்கள் கேள்வியையே செப்பனிட்டு வெளியிட்டுள்ளோம். கட்டுரையை அனுப்பினுல் எங்களுக்குத்தான் வேலை அதிகமாகும். உங்கள் 'ஜனசக்தி'க்கு அனுப்புங்கள்—ஆசிரியர்கள் குறைகளை நிறையாக்கிச் சரி செய்து வெளியிட முன் வரட்டும்! 'தென்றல்' உங்கள் சவாலை ஏற்று, சரியான பதில் விடுக்க என்றும் தயாராக இருக்கிறது! விரைவில் செய்க!

மாஜினியின் புத்தகங்களுக்கெல்லாம் மறுப்புரை கூருமல் தனி மனிதனைப்பற்றி சாக்கடை பாஷையில் எழுதுவது ஏன்? சரக்கில்லாத காரணமா—ஜன்னிப் பிதற்றலா?

கம்யூனிஸ்ட்கள் கண்ணியத்திற்குப் பெருமை தருபவர்கள் என்று கிளை மாநாட்டுச் சிறப்புச் சொற்பொழிவாளர்கள் பேசுவதெல்லாம் பொய் என்பதை எடுத்துக்காட்டத்தான் உங்கள் வார்த்தைகளை அனுமதித்துள்ளோம். மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்டவரை மீட்கத் துடிக்கும் வேகத்தில் உங்களையே மறந்துவிட்டீர்கள் – நினைவிழந்த நிலையில் இக்தக் கேள்வியை எழுதியிருப்பீர்கள் என்று கருதுகிறேன். மாஜி ரெங்கசாமியாரின் ஏடுகளுக்கெல்லாம் பதில் கூறமுடியும். தென்றலில் இடம் குறைவு. எனக்கு நேரமில்லை. மேதைத் தன்மையைக் குறிக்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் தருவேன். கொஞ்ச காலம் பொறுத்திருங்கள்!

கி. ப. துரைசாமி,
கிணத்துக்கடவு.

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ரயில்வே லேபர் யூனியனுக்கும் என்ன உறவு?

பெயர் மாற்றம் இருக்கிறதே தவிர செயல் முறைகளில்—தலைவர்களில் மாற்றம் இல்லை! இங்கே இருப்பவர்கள் அங்கே; அங்கே இருப்பவர்கள்தான் இங்கே! கம்யூனிஸ்ட் கட்சி பாதாள வாசத்திற்குப் போகிறதென்ருல், லேபர் யூனியன் முன்பெல்லாம் வேலை நிறுத்தம் பேசும். இப்போதுதான் உண்ணுவிரதம் பேசிற்று! கேரளத்துத் துப்பாக்கி வேட்டைகளில் பிணங்கள் விழுந்த நேரமாகப் பார்த்து அகில இந்தியாவிலும் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் துவக்கப்பட்டதையும் 'அய்யங்கார்' தோழர் முக்கியக் கதாநாயகராக மாறியதையும் தாங்கள் அறிவீர்களே! சங்கரன் நம்பூதிரி மாஸ்கோவிலிருந்து மந்திரிகள் வந்தால் மதுரைக்கு ஓடி வந்து அழைத்துச் செல்வார். அன்று அவர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

★

இரா. அ. பழனிச்சாமி,
இராசிபாளையம்.

"இன்றையக் கேரளம், நாளைய தமிழகம்" என்று கம்யூனிஸ்ட்கள் சொல்லும் நிலை எப்படி இருக்கும்?

தமிழ்நாட்டு முதலாளிகளை அழைத்து, சர்க்காருக்கு யோசனைகள் தர வேண்டுமென்றும் கூட்டாக வேலை துவக்கி, தொழில் வளர்க்க வேண்டுமென்றும் அபூர்வ நிலை ஏற்படும்! சர்க்கார் ஊழியர்களுக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் ரகசிய இணைப்புக்கள் ஏற்படலாம்! போலீஸ்காரர்கள் ஊரிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி கமிட்டிகளிடம் கலந்து பேசிவிட்டுத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்! கம்யூனிஸ்ட்கள் கருத்துப்படி போலீஸ்காரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டால்கூட அந்தப் பழியை கம்யூனிஸ்ட்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முதலாளிகள் போலீஸ்காரர்களை விலைக்கு வாங்கிவிட்டதாகப் பொது மக்களிடம் பொய் சொல்லியாவது ஓடிப் பிழைத்துக்கொள்வார்கள்! கழகக் குரலில், மத்திய சர்க்கார் தமிழ் நாட்டையும் புறக்கணிக்கிறது. பாரபட்சம் காட்டுகிறது என்று பேசுவார்கள்! நவ கேரளம்போல—'நவ தமிழகம்' என்று புதிய வார்த்தையைத் தருவதற்கு—சில ஆண்டுகளுக்கு முன்னுல் 'ஐக்கிய தமிழகம்' பேசிய இலக்கிய மேதைகள் இருக்கிருர்கள்! ஆனுல், நாளைய தமிழகம் கம்யூனிஸ்ட்களுக்கல்ல என்பது என் கருத்து!

ஜூபிடரின்
அண்ணு பத்தி
JUPITER PERFUMERS
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

விருத்தப் போட்டி

மனமொத்த காதலர்தம்
 ஒழுக்கத்தை அகப்பொருளாய்
  வடித்தும், போரில்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்,
இனங்காத்த வீரத்தை
 நல்லரசை புறப்பொருளாய்
  இயம்பும் பெற்றி
புனலூற்ருய்ப் பொங்குதமிழ்
 ஒன்றினுக்கே உண்டு;வெறும்
  புகழ்ச்சி யல்ல !

—கோ்ஙைச் சிரா.

★

புனல்கக்தும் விழிமங்கை
 புலம்பியழும் நெடுங்குரலைப்
  புலவன் கேட்டான்;
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
சினங்கக்க வழக்குரைத்தே
 முடிசிதைத்த கண்ணகியின்
  மரபா, தோழைத்
தனங்காக்க இன்றழுது
 தவிக்குநிலை அடைவதெனத்
  தனையே கேட்டான் !

—என். எம். முகைதீன், ஆயர்பாடி.

★

கனல்குடிலில் பட்டதெனக்
 கனித்தமிழில் வடமொழியும்
  புகுதல் கண்டும்
தினம்காணும் நச்சரிப்பாம்
 வடநாட்டின் வாலாட்டம்
  மிகுதல் கண்டும்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
புனல்பட்ட நெருப்பாகிப்
 போவதுவோ ? புலங்கெட்ட
  புன்மை நெஞ்சே !

—மதிமன்னன், திருப்பாலைக்குடி.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தினவெடுக்கும் தடந்தோளும்
 தெவ்வர்களைப் புறங்காணும்
  வீர வாளும்
இனத்தோடு மொழிபுரக்கும்
 ஏற்றமிகு பண்பாடும்
  இன்னோ ரன்ன
தினந்தினமும் நிலைபெறவே
 திகழ்ந்தோன்யார் ? எனக்கேட்பின்,
  'தமிழன்' என்போம்.

— தாம்பரக்கிழான், தாம்பரம்.

★

எனைமிக்கப் பணிவோடு
 இளமங்கை அழைத்திட்டாள்
  என்றே சென்று
மனம்சொக்க எழிலுண்டேன்;
 மதுமலரின் தீந்தேனை
  விலைக்கே கேட்டேன்;
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
சினங்கக்கிப் புயல்சீற
 சிறுத்தையென எதிர்த்திட்டாள்;
  செத்தே போனேன் !

— க. இராமசாமி, ஆயர்பாடி.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்,
தினவெடுத்த திண்டோளும்,
 உயர்குன்றம் போல்நிமிர்ந்(து)
  ஆர்த்த மார்பும்,
நனிவுதிகழ் இன்சொல்லும்,
 மாற்றலர்கள் கேட்டஞ்சும்
  மேடைப் பேச்சும்,
கனவாகப் போச்சுதையோ !
 அழகிரியே ! இனியுன்னைக்
  காண்ப தென்றோ !

— காரழகன், திருவண்ணாமலை.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தினவெடுக்கும் திண்தோளும்
 தகைமைசால் தொல்புகழும்
  தோலா நாவும்
சினமேவும் படைவலியும்
 சிறப்பியும் சிங்கம்நிகர்
  தமிழர் நின்ருல்
இனமென்ற அடிப்படையில்
 திராவிடத்தை இமைப்பொழுதில்
  கொள்ள லாமே !

— பசுமலை வீர முருகேசன், மதுரை.

★

மனக்கண்ணில் தெரிந்திடினும்
 மருவுகிலர் அழித்தொழிக்கும்
  வன்மை மிக்கான்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்,
  அஞ்சா நெஞ்சும்
மனமொத்து மருவியவள்
 வயிற்றுதித்து மணங்கமழும்
  மொட்டின் முன்னம்
புனல்போலும் குளிர்விழியாள்;
 புதுமலராய் குழைகுரலாம்;
  புல்லும் நெஞ்சாம்.

— மு சு. மணி, குருர்.

★

கனல்கக்கிக் கொழுந்துவிடும்
 பெருநெருப்பும் நனிவிரைவாய்
  வீசும் காற்றும்
புனல்மழையின் புதுநீர்முன்
 அணைவதேனோ ? புவியினிலும்
  பெருவீரர் தம்மின்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
கனங்குழையார் கொட்டுகின்ற
 பெண்மையெனும் கடுங்குளிர்முன்
  அணைவ தாலோ ?

-இரத்தினசனர்த்தனன், கவுண்டர்பாளையம்.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தனக்கென்றோர் வினைபுரியாத்
 தகவுடனே தமிழ்ப்பற்றும்
  கொண்டு பண்டு
இனங்காத்த எழில்மறவன்
 இசைப்புலவன் இராவணன்
  ஈழ வேந்தன்
தனக்குற்ற துயர்மரணம்
 தனைபுணர்ந்து தமிழ்ப்பகைவர்
  சூழ்ச்சி மாயம்

-க. பொ. இளம்வழு[illegible]ன் தாம்பம்.

★

மணம்கக்கும் மலர்த்தமிழை
 வடபுலத்தார் மதிக்கவில்லை
  என்று கேட்டு
சினம்கக்கும் கொடுமுகத்தில்
 சிலைநிகர்த்துத் துடித்துநிற்கும்
  செழுமீசையும்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
முனம்வாழ்ந்த தமிழரிடை
 இருந்ததுண்டு இதுபொழுதோ
  மூச்சே இல்லை !

—பே. சா. தனராசு, நாமக்கல்.

★

தினந்தோறும் தமிழோசை
 தெருவெல்லாங் கேட்டின்பம்
  திளைப்ப தற்கும்
மனமகிழ்ந்து மனைவியொடும்
 மக்களொடும் மாண்புடனே
  வாழ்வ தற்கும்
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தினவெடுத்த திண்டோளும்
 திராவிடனே வேண்டுமடா
  தெற்கு மீட்க !

—அ. கவியரசு, கடுகூர்.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தினவெடுக்கும் மலைத்தோளும்
 பெரும்பகையைக் கொல்கின்ற
  திறமும் எங்கே ?
உனதன்புத் தமிழன்னை
 உன்நிலையைத் தினமெண்ணி
  உருகு கின்ருள்
மனம்நொந்து போகுமுன்
 மாற்றவரைச் சாய்த்திடவே
  வாராய் தம்பீ !

—மீராமன்னன், போடி.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
இனம்வளர வினைபலவும்
 முனைந்தியற்றும் தோள்வலியும்
  எங்கே, எங்கே ?
உனதருமைத் தமிழ்த்தோழர்
 உயர்வின்றி உலைகின்ருர்
  அடிமை வாழ்வில் !
இனியென்ன வீணுறக்கம் !
 எழுந்திடுவாய் தளையறுக்க
  இன்றே; இன்னே !

— சு. ச. ஆறுமுகம், அருப்புக்கோட்டை.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
கனல்கக்கும் பெருமூச்சும்
 சரம்பிறங்கும் உறைவாளும்
  கொண்டு முன்னோர்
இனங்காத்தார் மொழிகாத்தார்
 இருந்தமிழ்சேர் நிலங்காத்தார் !
  இன்றோ நாட்டின்
கனமானோர் என்காத்தார் ?
 காசுக்கே உடல்காத்தார் !
  காணீர் ! காணீர் !

—பே. அ. இளஞ்செழியன், பெருவளப்பூர்.

★

அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
இனங்காக்கும் பெருவிருப்பும்
 இணைந்திடவே, மலர்க்குழலில்
  மஞ்சு துஞ்ச
புனங்காக்கும் வடிவழகே !
 புறத்திகழ்ந்த படைநடுவே
  வஞ்சர் அஞ்ச
பனங்காட்டு நரியெனவே
 புறப்பட்டேன் பகையழிப்பேன்
  பஞ்சு பஞ்சாய் !

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

★

இனத்தாலே நாமொன்று !
 எழில்மிக்க இவ்விடமும்
  சொந்த முண்டு !
மனத்தினிலே நல்விதமாய்
 கருத்திருப்பின் மாற்றுனுக்
  கிங்கென் வேலை ?
அனல்கக்கும் இருவிழியும்
 அதிர்ந்தெழும்பும் பெருங்குரலும்
  அஞ்சா நெஞ்சும்
தின்வெடுக்கும் திண்தோளும்
 வலியுமிக்க தென்தோழா !
  தூக்கம் போக்கு !

—தஞ்சை முத்துதாசன்.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.